622

குமன் … ரி

தமிழ் வா…

0,125-626

குறள் நெறி

தமிழ் வாழ்க

(கட்சி சார்பற்ற, அரசியல், இலக்கியப் பண்பாட்டு வெளியீடு)

ஆசிரியர் · பேராசிரியர் சி. இலக்குவனர் ★ திங்களிரு முறை வெளிவரும்

மலர் : 1 திருவள்ளுவராண்டு 1995 தைத்திங்கள் 2ஆம் நாள், (15-1-1964) இதழ் : 1

கலைத்தந்தை
கருமுத்து தியாகராசச் செட்டியார்

குறள்நெறி போற்றும் குன்றுச் செல்வர்;
அயரா உழைப்பினர்; அருங்கலை மகிழ்நர்;
நற்றமிழ்க் கட்டுரை, நானிலம் புகழ
இயற்றும் பெற்றியர், இனிய தமிழில்
உரைநடை ஆக்கும் உயர்பெரும் புலவர்
தோன்றிட உதவும் தூய தமிழினர்·
எதிலும் செம்மை இனிதே காண்பவர்·
எளிய வாழ்வினர்; இனிய பண்பினர்;
கலைத்தந்தை யெனக் கலைவலார் போற்றும்
கருமுத்துத் தியாகராசர்; கலைபல வளர்க்கும்
உயர்தனிச் செம்மல்; உலகில் இவர்வழி
ஏற்று வாழ்வோர், எவரும்
போற்றி ஏத்தும் புகழ்நிலை யுறுவரே.

25
காசுகள்

வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க

‘குறள்நெறி’க்கு வாழ்த்து!

சித்தாந்த மணிமொழிச் செல்வர் சி. ராம. இராமசாமி செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

‘குறள்நெறி’ என்றதிங்கள்இருமுறை வெளியீடு மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் திரு. இலக்குவனார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவருகிறது.

உலகியலில் நம் செந்தமிழ்நாடு தலைசிறந்து போற்றிநிற்கும் குறள்நெறி, உலக முழுவதும் பரவுதல் வேண்டுமென்பது ஆசிரியர் கருத்தாகும். திருக்குறளை ஆக்கித் தந்த திருவள்ளுவரின் பெருமையையும், குறள்நெறி நின்று மக்கள் சிறப்படைய வேண்டுமென்ற ஆர்வத்தையும் உலகமறியச் செய்ய அறிவுடைப் பெருமக்கள் பலர் முன்வந்து நாள்தோறும் தொண்டாற்றும் இந்நாளில் பேராசிரியர் இலக்குவனாரவர்கள் தங்கள் பட்டறிவு வாயிலாகக் கண்ட செவ்விய கருத்தை வெளியிட்டுத் தமிழ்நாடு பயன்பெறச் செய்ய வேண்டுமென்ற அன்பின் மிகுதியால் இவ் வெளியீட்டை விரும்பி நடத்த முன்வந்திருப்பது போற்றுதற்குரியது.

அறம், பொருள் இன்பமாகிய மூன்றையும் வகுத்து, சிந்தையும் மொழியும் செல்லாநிலைமையதாகிய வீடுபேற்றை உணர்ச்சி வயத்தால் உய்த்துணர்வித்த பெருமை திருவள்ளுவர் கண்ட சீரிய நெறியாகும். ‘வையத்து வாழ்வாங்கு வாழ்தலே வானுறையும் தெய்வ நிலை’ என்ற ஆசிரியரின் கருத்தே தமிழ் நாட்டுக்குச் சிறப்பு விதியாக அமைந்திருப்பது நினைவுகூர்ந்து மகிழத்தக்கது.

‘காட்டிய கண்ணே தனைக்காணு கண்ணுக்குக்
காட்டாய உள்ளத்தைக் கண்காணு—காட்டிய
உள்ளந்தனைக் காணு உள்ளத்தின் கண்ணுய
கள்வன்தான் உள்ளத்திற் காண்’’ — என்ற

சிவஞானபோதம் உள்ளுறை முதல்வனையறிய மேற்கோள் காட்டிநினைவுபடுத்தியிருப்பதுப் குறிப்பிடத்தக்கது. முறைப்படி அறங்காத்து, பொருள் வளர்த்து, இன்பம் துய்க்கும் சிறப்பியல்பு உலக மக்கள் யாவரிடத்தும் அமையப்பெறுமாயின் அந்நெறி ‘இப்பால் உலகத்து இசை நிறீஇ உப்பால் உயர்ந்த உலகம் புகும்’ என்ற இலக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக அமையுமென்பதில் சிறிதும் ஐயமின்று.

‘அறக்காவல் அரசுரிமைக்கு அழியாத பெருங்காவல்’ என்பதுணர்ந்து பெரு நிதி தொகுத்து கலைப் பயிர் வளர்த்து புகழ்பெற்று நிற்கும் கலைத்தந்தை கருமுத்து. தியாகராசச் செட்டியாரவர்கள் துணைவலியால் ஆதரவு பெற்று நிற்கும் பேராசிரியர் இலக்குவனார் அவர்களின் முயற்சிமுழுதும் வெற்றி பெற்று அவர்கள் தொடங்குகின்ற இதழ் பல்லாண்டு நிலைபெற்று நின்று சிறப்பெய்துமாறு அங்கையற்கண்ணியுடனுய் ஆலவாய்ப் பெருமான் திருவருள் துணைநிற்பதாக.

“குறள் நெறி பரப்புக”

புலவர் இரா. இளங்குமரன்

1 தமிழன் பெருமை உரைத்தற்குத்
தக்க தேதும் உண்டேயோ?
‘அமுதம் எந்தம் மொழி’என்றால்
“ஆஆ:’’ உலகில் எத்துணைப்பேர்
அமுத மொழியில் திளைக்கின்றார்?
அளக்க வேண்டாம்’’ எனச் சொல்லி
உமிழாக் குறையாய்ப் பழிக்கின்றார்.
உள்ளம் நைய அம்மம்மா!

2 ‘ஆண்ட மொழியெம் மொழி’என்றால்
‘அழகாம் உங்கள் மொழி’யென்று
மாண்ட மொழிக்காய் வாழ்வாரும்
மட்டம் தட்டப் பார்க்கின்றார்;
ஆண்டு வந்த அன்னியரோ
’’அடிமை ஆகிக் கிடந்தீரே!
வேண்டும் இந்தப் புக’’மென்று
விரைவாய் வாயை அடைக்கின்றார்.

3 ‘பழமை மொழியெம் தமி’ழென்றால்,
‘பழமைக் கென்றோர் புகழுண்டோ?
மொழியில் இளமை முதுமையெனும்
முரட்டுப் பேச்சால் பயனுண்டோ?
விழுப்ப மான அறிவியல்கள்
விரிந்த ஆய்வுப் பெருநூல்கள்
எழுந்த துண்டோ உம்மொழியில்’’
என்றே சூடு வைக்கின்றார்

4 “உலகம் வியக்கும் இலக்கண நூல்
உடையோம் உணர்மின்’’ என்றாலோ,
“புலம்ப வேண்டாம் புகழுடையீர்!
புதைய லாக இருந்தாலும்
பலவாய்க் கட்டுப் பாடுகளைப்
படைத்து மொழியைச் சிறையிட்டீர்!
இலகும் பெருமை இதுதானோ?’’
என்றும் புலம்ப ஆளுண்டே!

5 மொழியைத் தவிர்த்து வளத்தாலோ
முயற்சி ஊக்கம் இவற்றாலோ
கொழிக்கும் செல்வம் கொடைவண்மை
கூர்த்த மூளை இவற்றாலோ
எழுச்சி கிளர்ச்சி இவற்றாலோ
ஏதும் போட்டி போடற்கு
வழியே இல்லை உலகோடு!
வாய்த்த தேதும் உண்டேயோ?

6 “உலகக் குன்றில் ஒருதாமாய்
உயரத் துயரே நின்றிருந்து
புலமைத் தலைக்கோல் தனைப்பெற்றுப்
பொருந்தும் அறத்தைப் புகன்றுள்ள
தலைவர் பெருமான் வள்ளுவனார்
தனிநூல் உடையோம்’’ எனச்சொன்னால்
தலையைத் தாழ்த்தி நிற்கின்றார்,
தடையொன் றுரைக்க வழியற்றே.

7 திருவள்ளுவத்தின் சிறப்பாலே
திகழும் தமிழன் நன்றியுடன்
பெருகுஞ் செல்வம் எனப்பேணிப்
பெரிதும் அதனைப் பரப்புதலே
உரிய கடனும்; இதைவிட்டால்
உலகப் புகழை அடைதற்காம்
அரிய வழியை இழந்தவனே;
ஆய்வுப் பேறும் இழந்தவனே!

வாழ்த்துரை

அண்ணலார் பு. க. சுப்பிரமணியனூர்

இன்றைய உலகத்தைக் காண்கிறோம். புத்தம் புதிய சமுதாய நோய்கள் மருத்துவப் பேரறிஞர்களையே குழப்பி வருகின்றன.

மக்களின் அறிவு வளர்ச்சிக்கேற்ப அவர்களின் உள்ளம் வளர்வதாக இல்லை. எங்கு நோக்கினும் பூசல், பிணக்கு, போர் இருந்தும், மனித இயல்புகளுக்குரிய உரிய பண்புகளை வளர்த்து. மக்களை மக்களாக்கும் திருப்பணிகளாற்ற முன்நிற்பவர்களைக் காண்பது அரிதாக உள்ளது.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்களிடத்து உறங்கிக் கிடக்கும் உள்ள ஆற்றல்களை எல்லாம் வெளிக்கிளப்பி, பண்பாட்டைவளர்த்து, உள்ளத்தைச் செம்மையாக்குவதற்கு உரிய பாடத்திட்டமோ, தக்க ஏற்பாடோ செய்யப்படவில்லை.

மக்களின் திறன்களை யெல்லாம் திரட்டி, நாட்டு நலன்களில் ஈடுபடுத்தி வந்தால், காட்டாக திருக்குறள் நெறி நின்றுவரும் தொண்டர்களின் படைகளைத் திரட்டி, திறமையோடு ஆக்கப் பணிகளாற்றி வரச் செய்தால், இந்த உலகையே விரைவிலே ஒரு பேரின்ப உலகாக ஆக்கி மகிழலாம். அதற்கேற்ப எல்லோரையும் அன்புப்பிணைப்பில் பிணைத்து ஊக்கிவர காந்தியடிகளைப் போன்ற தன்னலத்தையே கருதியிராத, நேர்மை ஒழுங்கு கட்டுப்பாடு முதலியன மதித்துச் செயலாற்றும் உயர் தலைவர்களைத் தேடிக் காணவேண்டியதிருக்கிறது.

எத்துறையை நோக்கினும் தவறான வழிச் சென்று மகிழ்ந்திருப்பவர்களைத்தான் பார்க்க நேர்கிறது. அவர்களை நேர்வழியில் செலுத்தும் சக்தி வாய்ந்த இயக்கங்கள் தோன்றவில்லை.

மலர்க 'குறள் நெறி'

கி. ஆ. பெ. விசுவநாதம்

சான்றாண்மை என்பது தமிழர் நெறி. அது தமிழ் மக்களின் சொந்தச் சொத்து. மனிதரிடத்து காணப்பெறுகின்ற உயர்ந்த குணங்களிலெல்லாம் மிகச்சிறந்து விளங்கும் ஒன்றே "சான்றாண்மை" எனப்பெறும்.

இது இன்று மறைந்து வருகின்றது. உலகம் செழிக்க வேண்டுமாயின் சான்றாண்மைத்தன்மை மறுபடியும் மலர்ந்தாக வேண்டும். அதற்குரிய ஒரே வழி குறள்நெறியைப் பரப்புவதே. அப்பெரும் பணியை இன்று மலரும் "குறள் நெறி" விரைந்து செய்யும் என நம்புகிறேன்.

இன்று சட்டமன்றத்தில் திருவள்ளுவரின் படம் இடம் பெற்றிருக்கின்றது. இது போதாது. திருவள்ளுவர்நெறி இடம் பெறவேண்டும். ஆட்சி செய்பவர் உள்ளத்திலோ, அண்டை மாநிலத்திலோ மட்டுமல்ல இந்தியா முழுவதுமே இந்நெறி பரவ, தமிழக அரசு முயலவேண்டும். இதற்குரிய முயற்சியை இன்று வெளிவரும் "குறள் நெறி" எளிதிற் செய்யலாம்.

இத் தைத் திங்கள் முதல் நாளில் திருவள்ளுவர் தொடர் ஆண்டு 1995 எனப்பிறந்திருக்கின்றது. இன்னும் 5ஆண்டுகள் சென்று பிறக்கின்ற தைத்திங்கள் முதல் நாளில் திருவள்ளுவர் தொடர் ஆண்டு 2000 எனப் பிறக்கும். அந்த ஈராயிர ஆண்டு விழாவை இந்தியா முழுவதும் கொண்டாட தமிழக அரசு முயல வேண்டும். இதற்குரியதைச் செய்ய இன்று மலரும் "குறள் நெறி" இப்போதிருந்தே முயன்றாகவேண்டும்.

குறள் தோன்றிய, சங்கந் தோன்றிய மதுரையிலிருந்து தோன்றும் இக் "குறள்நெறி" நன்கு தழைத்து தமிழகம் மட்டுமின்றி, பிற நாடுகளிலும் குறள் நெறியைப் பரப்பி, சிறப்படையவேண்டும் என வாழ்த்துகிறேன்.

நாடுசெழிக்க, மொழிவளர, மக்கள் நல்வாழ்வுவாழக் குறள் நெறி தழைத்தாகவேண்டும்.

வாழட்டும் தமிழ் இனம்! வளரட்டும் குறள் நெறி!

பண்பாட்டின் அடிப்படையிலே அமைந்து, தூய நல்ல உள்ளத்தின் அமைதியிலிருந்து பிறக்க இருக்கும் கலை இன்று கலையாகவே இல்லை.

அறிவுக்கும் புலனுக்கும் விருந்து அளித்து வரும்போது தான் விழா விழாவாகிறது. இன்று கொண்டாடப்படுகின்ற விழாக்கள் தூய்மை இழந்து மக்கள் உள்ளத்தில் கீழ் எண்ணங்களையும் தாழ்ந்த உணர்வுகளையும் கிளறிவிட்டு அவர்களின் உள்ளத் தூய்மையைக் கெடுத்து விடுகின்றன. இதனால் விழாக்களை உருவாக்கின நல்லெண்ணம் படைத்த பெரியோர்களின் நோக்கமே பாழ்படுத்தப்பட்டு வருகிறது.

கோயில் விழாக்களில் எல்லாம் ஆரவாரம், ஆடம்பரம், தரக்குறைவான ஆடல், பாடல் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்து வருகின்றன. ஆனால் இறை அன்பு மக்களின் உள்ளத்தில் மலர்வதாகக் காணோம்.

கல்வி, அறிவு, ஒழுக்கம், உயர் பண்பாடு, நாகரிகம் முதலியவற்றிற்கு ஊற்றுக் கண்ணாக இருந்து மக்களை நல்வழியில் செலுத்த வல்ல ஆற்றல் மிகுந்த கருவியாம் திரைப்படம் இன்றைய உலகில் விளைவிக்கும் விளைவுகளை நோக்குமிடத்து இவை நாட்டுக்குத் தேவைதானா என்று எண்ணத் தோன்றுகிறது.

(4ஆம் பக்கம்)

படைப்புப் பல படைத்து மக்களை அறியாமை இருளிலிருந்து விடுவித்து, அவர்களை நன்முறையில் திருத்தி, அவர்களின் நல்வாழ்வுக்கு, தூய இன்ப வாழ்வுக்கு வழிகாட்டியாக விளங்க இருக்கும் எழுத்தாளர் பெருமக்கள், பண நோக்குள்ளவர்களாய் உரிய கடமைகளை மறந்து எவ்வழியிலும் பணம் செய்யும் பெருவணிகர்களாக மாறிவிடுவார்களோ என்ற அச்சம் நல்லவர்கள் உள்ளத்தில் எழச் செய்கிறது.

ஒரு நாட்டுக்கு உயிரெனப்படுவது அந்நாட்டு மொழியாகும். அதனை முறையாக வளர்த்து வருவது குடிமக்களின் உரிய கடமையாகும். நம்மொழியோ செய்யுள் தன்மையில் கிரேக்க மொழியினையும், இலக்கியப் பெருமையில் இலத்தீனையும் வெல்லவல்லது, என்றார் வின்சுலோ. மிகச் சிறந்த மொழி என்றார் டெல்லர். 'தன்னேர் இலாத மொழி' என்றார்கள் பெரும்புலவர்கள். 'தமிழ்மொழி எம் மொழிக்கும் இழிந்த மொழியன்று, இனியமொழி' என்றார் போப். 'சீரிய மொழியாய் அழகிய இலக்கியங்கள் பொருந்தப்பெற்ற மொழி' என்றார் சான் மர்டாக். 'மிகப் பண்பட்டமொழி தமிழுக்கே உரியதாக வளர்த்த சிறந்த இலக்கியச் செல்வமொழி' என்றார் மாக் முல்லர். தனித்தியங்கவல்ல ஆற்றல் பெற்றது என்றார் கால்டுவல். இத்தகைய சிறப்புவாய்ந்த "என்றுமுளதென் தமிழ்" இன்று படும்பாடு வருந்தத்தக்கது.

நம் நாட்டின் நிலைமையை நோக்கும்போது தமிழர்க்கே தம் மொழியில் உண்மையாகவே பற்று உளதோ என்பதில் ஐயப்பாடு. பல நூற்றாண்டுகளாகவே உலகம் போற்றக்கூடிய உயரிய இலக்கியங்கள் வெளிவந்ததாகவே காணோம். மொழி வளர்ப்பதில் மக்களிடத்து ஊக்கமும் அதனை ஊக்குவிப்பாரும் இல்லை. தமிழில் தமிழிசை வேண்டுமென்றால் பெரும் போராட்டம்; மொழித்தூய்மை கடைப்பிடித்தால் பெரும் தொல்லை; மொழி வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டால் அவ்வூக்கத்தைத் தளர்த்திவிடப்பேருரைகள்; மொழிப்பற்று குறுகிய நோக்கமாகக் கருதப்படுகிறது. வெளிநாட்டுப் பேரறிஞர்கள் தமிழின் தனித்தன்மையை, ஆற்றலை, வளத்தை, இனிமையைப் பறை சாற்றியிருந்தாலும், பண்டைக் காலம் முதல் அரசு இருக்கையில் வீற்றிருந்து அரசோச்சிய போதிலும், கல்லூரிகளில் பயிற்சி மொழியாக இருக்கக் கூடுமா என்பதில் தமிழர்களுக்கே

ஐயம்; அதற்கான முயற்சிகொள்வதில் தயக்கம்; ஒரிருவர் அதனை எடுத்துக் கூறினாலும் பெருங் கொந்தளிப்பு; இறைவன் இல்லங்களில் இன்தமிழ் என்றால் போராட்டம்; சடங்குகளைத் தாய்மொழியில் செய்யவேண்டும் என்றால் கடும் எதிர்ப்பு; தமிழ் அறிஞர்கள் பலர் தமிழால் வாழ்கிறார்களே ஒழிய ஒற்றுமையாக் கூடி, ஒரு தமிழ்ப் பேரியக்கத்தை உருவாக்கி, மொழி பற்றி ஆய்ந்து, ஆக்கப் பணிகளாற்ற முன் வருகிறார்கள் இல்லை; இளைஞர்கள் உள்ளத்தில் தமிழார்வம்பொங்கித் ததும்பி வழிந்தோடுவதைக் கண்டாலும் அவர்களையாவது ஆற்றுப் படுத்தத் தக்கோர் வெளிவருவதாக இல்லை; அத்தகைய அக்கறையும் பெரும்பாலோரிடத்து இல்லை. புலவர் வாழும் நாட்களில் அவர்களைப் போற்றாது அவர்கள் இறந்த பிறகு மணி மண்டபம் எழுப்புவோம்; அவர்களுக்காக விழாக்கள் கொண்டாடுவோம்; இன்ப உலகில் உலவி வருவோம்

உலகத்தில் பிளவுச் சக்திகள் தோன்றி, விரிந்து, உலகம் போற்றும் உயர்ந்தவராம் காந்தி அடிகளையும், புகழிலே பிறந்து, புகழிலே வளர்ந்து, புகழையே தம் நிழல் போல ஆக்கி வந்த உலகப் பெருமகனார் கென்னடியையும் சுட்டுக் கொல்லக் கூடிய தன்மையில் வலிமையுற்று வந்துள்ளன.

இந்தச் சூழலில் "குறள் நெறி" என்னும் தமிழ்ஏடு தமிழ் உள்ளம் கொண்டு, தமிழ் வளர்த்து வரும், தமிழ்ப் பெரியார்களைக் கொண்டு, தமிழே உயிரெனத், தன்னலங்களை எல்லாம் துறந்து, தியாக உணர்வுடன், பல இன்னல்களுக்கிடையே தமிழுக்கென அயராது உழைத்து வருகின்ற பேராசிரியர். சி. இலக்குவனார் ஆசிரியராகக் கொண்டு வெளிவருவது தமிழகம் செய்த பெரும் பேறு என்னலாம்.

இந்தத் தமிழ் ஏட்டில் தூய தமிழ் இருக்கும்; அரிய தொண்டினுக்குவாய்ப்பிருக்கும்; தமிழுக்கு ஊறு தேடுவோரின் கருத்துகளுக்கு மறுப்பிருக்கும்; ஆற்றல் படைத்த தமிழ் அன்பரை ஊக்குவிக்கும் பான்மையிருக்கும் என்பதில் நமக்கெல்லாம் நம்பிக்கை உளது. வாழ்க குறள் நெறி; வளர்க அதன் புனிதத் தொண்டு.

தொல்காப்பிய விளக்கம் (பேராசிரியர் சி. இலக்குவனர்)

முன்னுரை

நம் இனிய செந்தமிழ் மொழியில் உள்ள தொன்மையான நூல்களில் மிகவும் தொன்மை வாய்ந்த ஒன்ருகத் தொல்காப்பியம் கருதப்படுகின்றது. தொல்காப்பியத்தின் காலம் கி. மு. ஆரும் நூற்ருண்டுக்கு முற்பட்டதாகும். வடமொழிப் பாணினியின் காலமாம் கி. மு. நான்காம் நூற்ருண்டுக்கும், தென்மொழித் திருவள்ளுவரின் காலமாம் கி. மு. முதல் நூற்ருண்டுக்கும் முற்பட்ட காலத்ததாகும் தொல்காப்பியம் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

வடமொழியாளர் தமிழகத்தில் புகுந்த காலத்திலேயே தொல்காப்பியம் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும். வடமொழியாளர் தென்னகம் நோக்கிப் புறப்பட்ட காலம் கி. மு. பத்தாம் நூற்ருண்டு என்பர் வரலாற்ருசிரியர். அந்நூற்ருண்டில் அவர்கள் தொடங்கிய தென்னகச் செலவு விரைந்து நிகழ்ந்திருத்தல் இயலாது. சிறு சிறு கூட்டத்தினராய் மெல்லவே வந்து குடியேறி இருத்தல் வேண்டும். அவ்வாறு வந்து தமிழகத்தில் குடியேறியமை முற்றுப் பெற்றகாலம் கி. மு. ஆரும் நூற்ருண்டாக இருக்கலாம் என்பர். 'ச' தமிழ்ச் சொல்லின் முதல் எழுத்தாக வாராத காலத்திலும், யவனர்கள் இந்நாட்டில் புகாத நாளிலும், சமண புத்த சமயங்கள் தோன்றுவதற்கு முன்பும், நாணய வழக்கு ஏற்படுவதற்கு முன்னரும், தொல்காப்பியம் தோன்றியிருத்தல் வேண்டும்.

(கால ஆராய்ச்சியின் விரிவு எம ஆங்கிலத் தொல்காப்பியத்தில் காண்க)

வடமொழித் தொடர்பால் தமிழின் பழைய மரபுகள் அழிந்து, தமிழ் அழிந்து போகாமல் காக்கவே தொல்காப்பியம் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும். 'தொல்காப்பியம்' எனும் பெயரே, ''பழமையான மரபுகளைக்காப்பது'' எனும் பொருளைத் தரும். இந்நூலை இப்பெயருடன் இயற்றியதனுல்தான்—'தொல்காப்பியம்' எனும் நூலை இயற்றியதனுல் தான் — தொல்காப்பியர் எனும் பெயர் நூலாசிரியர்க்கு ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

''தொல்காப்பியம்' எனும் நூலை இயற்றியதனுல் 'தொல்காப்பியன்' என அழைக்கப்பட்டார்.'' என்பது, இந்நூலுக்குப்பனம்பாரனுர் எழுதியுள்ள பாயிரத்தாலும் அறியலாகும். ''தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி'' என்று பனம்பாரனுர் கூறுகின்ருர். 'தொல்காப்பியம்' இயற்றியமையால் 'தொல்காப்பியர்' என அழைக்கப்பட்ட, பின்னர் அவரின் இயற்பெயர் காலப்போக்கில் மறைந்துவிட்டது போலும். ஆதலின் நூலின் பெயர் தொல்காப்பியம்: 'தொல்காப்பியம்' எனும் நூலை இயற்றியமையால் அதன் ஆசிரியர் தொல்காப்பியர் என அழைக்கப்பட்டார் என்பதே சாலப் பொருந்தும் எனத் தெளியலாம். பழைய காப்பியக்குடியில் தோன்றியமையால் தொல்காப்பியர் என அழைக்கப்பட்டு அப்பெயரால் அவர் நூல் தொல்காப்பியம் என அழைக்கப்பட்டு வந்துள்ளது என்பது பொருந்தாது என்பது எளிதிற்புலனுகும்.

சமதக்கினி முனிவர் புதல்வர் திரணதூமாக்கினி என்பதெல்லாம் புராண நூலாரின் புனைந்துரையாகும்.

வேற்று மொழிவரவால் தமிழ் அழிந்து படாமல் காக்க, அவர் காலத்தில் நிலவிய இலக்கிய இலக்கணங்களைக்கற்று, ஆராய்ந்து, ஒல்காப்பெரும் புகழ்த் தொல்காப்பியம் எனும் உயர் நூலை இயற்றிய இப்பெரியார் கி. மு. ஆரும் நூற்ருண்டிற்கு முன்னர் வாழ்ந்த தமிழ்ப் பெருங்காவலர் ஆவார். பரதகண்டம் முழுவதும்-இமயம் முதல் குமரி வரை-ஒருகாலத்து நிலவி ஆட்சி புரிந்த தமிழ், வடமொழியின் கூட்டுறவால் ஆங்காங்குச் சிதைந்து மறைந்து புதுப்புது மொழிகள் தோன்றும் நிலை ஏற்பட்டுள்ளது என்பது முற்றிலும் உண்மையாகும். தொல்காப்பியர் போன்ற பெரும் புலவர்கள் ஆங்காங்குத் தோன்றி, மொழியைக் காத்திருப்பரேல் இன்று இந்தியாவின் தனி ஆட்சி மொழியாகத் தமிழ் தனியரசோச்சும் தனி நிலை பெற்றிருந்திருக்கும்.

வடவேங்கடம் தென்குமரியாயிடையேனும் தமிழ் நிலைத்திருக்குமாறு செய்த பெருமை தொல்காப்பியரையே சாரும். ஆகவே தமிழின் தனிப்பெரும் முதற் காவலர் எனத் தொல்காப்பியரைப் போற்றிப் புகழ்தல் நம்மனேர் நற்பெருங்கடனுகும். அவர் வழிநின்று நம் வண்டமிழைக்காக்க உறுதிகொண்டு தொல்காப்பியத்தைக்கற்றல் தமிழராய்ப் பிறந்தோர் அனைவரின் பிறவிப் பெருங்கடனுகும். தொல்காப்பியத்தைப் பற்றி நாவலர், நற்றமிழ்க் கணக்காயர் சோமசுந்தரபாரதியார் கூறுகின்ருர். ''அது (தொல்காப்பியம்) ஆரியப்பாணினிக்கும் ''தூரிய மேல்புவன அரித்தாட்டிலுக்கும் காலத்தால் முந்திய தொன்மையுடையது. பாணினியின் செறிவும், பதஞ்சலியின் திட்பமும், அரித்தாட்டிலின் தெளிவும், அவையனைத்திலுமில்லா வளமும் வனப்பும் அளவை நூன் முறையமைப்பும் பெற்றுச் செறிவும் தெளிவும் நெறிலா நெகிழ்வும் நிரம்பியமைந்தது.''

தொல்காப்பியம் கற்றுத் தூய தமிழ் வளர்ப்போம்

அறிஞர் முகம்மது சுல்தான், M.A., B.L.

திருக்குறள் - வாழ்க்கைநூல்

வாழ்வின் பயனை மக்கள் அடைவதற்கு வழிகாட்டிகளாக உலகின் பல்வேறு மொழிகளில் பல நூல்கள் உள. அவைகளுள் மூன்று நூல்கள், அவைகளை இயற்றியவர்களின் அறிவுத் திறத்தையும் ஆராய்ச்சி நுணுக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை. தாங்கள் எழுதியிருப்பவைகள் எல்லாம் வல்ல கடவுளின் நாதம் அல்லது தொனி அல்லது வெளிப்பாடு என்று **இந்த** மூன்று நூல்களின் ஆசிரியர்கள் சொல்லவில்லை. தங்களுக்குத் தெய்வதூதர்களால் அருளப்பட்ட திருவாக்கு என்றும், அவ்வாசிரியர்கள் **விளம்பரம்** செய்யவில்லை. அம்மூன்று நூல்களும் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் உலக மக்களுக்கு அளிக்கப்பட்டவை.

அவை; (1) கௌதம புத்தருடைய நல்லுரை **(உபதேசங்)**களான திரிபிடகங்கள்; பாலிமொழியில் இயன்றவை. (2) புத்தருடைய காலத்துக்கு ஏறக்குறைய ஒத்த காலத்தில் சீனாவில் வாழ்ந்த கன்பூசியஸின் ''அனலெக்ட்ஸ்'' என்னும் அறிவுரைகள் இந்நூல் சீன மொழியில் ஆக்கப்பட்டது (3) மேற்கூறிய அறிஞர்களுக்குச் சுமார் 400 ஆண்டுகளுக்குப்பின் தமிழகத்தில் வாழ்ந்த திருவள்ளுவரின் திருக்குறள்.

திருக்குறள் தமிழ் மொழியில் ஆக்கப்பட்டிருந்தாலும், மக்கள் குலம் முழுவதற்கும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ள நூல். தம் பரந்த அநுபவத்தையும், ஆழ்ந்த ஆராய்ச்சியையும், நுணுக்கமான கருத்துணர்ச்சியையும், திருவள்ளுவர் திருக்குறளாய் இயற்றியுள்ளார். இந்நூலில் வையத்து மக்களெல்லாம் வாழ்வாங்கு வாழ்வதற்கு வள்ளுவர் வழி வகுத்துள்ளார். **மக்கள்** குலம் ஒன்றே என்ற அடிப்படைக் கருத்தை **உள்ளத்திற்** கொண்டு திருவள்ளுவர் தம் கருத்துக்களை மக்களுக்கு விளக்குகிறார். சாதி, மதம், குலம், கோத்திரம், நிறம் முதலிய வேற்றுமைகளில் தன் அரிய காலத்தை வீணாக்காது. மனிதன், மனிதன் என்ற முறையில் எப்படி வாழ வேண்டும் என்னும் பொருளையே பல கோணங்களில் திருவள்ளுவர் தம் திருக்குறளில் விளக்குகிறார்,

சில அறநூல்கள், அவை தோன்றுவதற்கு முன் ஒரு பொற்காலம் இருந்ததாகவும் மக்கள் எவ்விதக் குற்றமுமற்ற நிறை வாழ்வு வாழ்ந்தார்களென்றும், அக்காலத்தை மக்களிடை புதுப்பிப்பதே தங்கள் குறிக்கோள் என்றும் கூறுகின்றன. திருவள்ளுவர் அப்படிப்பட்ட பொற்காலத்தையோ கற்காலத்தையோ கற்பிக்கவில்லை. அவர் காலத்தில் வாழ்ந்த மக்களிடையே நிலவி வந்த பழக்கவழக்கங்களையும், குணநலங்களையும், சீர்கேடுகளையும் திருவள்ளுவர் நன்கு ஆராய்கிறார். மக்களினத்திற்குத் தீமை செய்வனவாகவும், இயற்கைக்கு மாறுபாடானவையாகவும், மக்கட்குலத்தின் ஒருமைக்கு ஊறு செய்வனவாகவும் தனக்குத் தோன்றுகின்ற செயல்களை **அவர்** கடிந்துரைக்கிறார். திருவள்ளுவரின் **நல்லுரைகளான** முத்துக்கள், 'எல்லோரும் ஓர் குலம்' என்னும் சூத்திரத்தினை மணி ஆரமாகக் கோவை செய்யபபட்டிருக்கின்றன.

வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் மக்களிடையே எத்தனையோ குறைகள் இருந்து வந்தன. கொலை, களவு, காமம், குடி, சூது முதலியன நிகழ்ந்து கொண்டுதான் இருந்தன. கேடு சூழ்ந்த உலகைக்கண்டு வள்ளுவர் வெறுப்படைந்து 'வீழ்ந்துபோ, ஒழிந்துபோ'' என்று சினந்துரைக்கவில்லை. ஆனால் அக்கேடுகளின்றும் மக்கள் தங்கள் பண்பாட்டினால் விடுதலை பெற வேண்டும் என்பதைத் தன் கருத்திற்கேற்ப, வள்ளுவர், கேட்போர் நெஞ்சத்தை அள்ளும் வண்ணம் இயம்புகிறார்.

திருவள்ளுவரின் கருத்தில் கவர்ச்சியும் கனிவும் மிளிர்கின்றன. அதற்குக் காரணம் அவர் சொல்லாற்றல் மட்டும் அன்று, அவருடைய ஆழ்ந்த மக்களின் பற்று தான் 'சிறந்த காரணம் என்று சொல்லலாம். தன் கொள்கைகளை ஏற்று நடப்போர், வருங்காலத்தில் **துறக்க இன்பத்தை** அடைவார்களென்றோ, மீறுகிறவர்கள் நரகத்தில் உழலுவார்களென்றோ பசப்பும் பாவமும் திருவள்ளுவர் வாக்கில் பிறக்கவில்லை. எப்படித்தன் அறிவின் திறத்தால் அநேக முடிவுகளை வள்ளுவர் கண்டாரோ அவ்வண்ணமே தன் கருத்தைக்கேட்பவர்களும் தங்கள் அறிவின் திறத்தால் அக்கருத்துக்களை ஆராய வேண்டுமென்று அவர் வற்புறுத்துகிறார்.

''எப்பொருள் யார்யார் வாய்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்ற குறட்பா இங்கு நோக்கத்தக்கது.

மனித குலம் என்பது பலப்பல தனி மனிதர்களின் தொகுப்பு. மக்கள் வாழ்வு முன்னேற வேண்டுமானால் தனிமனிதன் ஒவ்வொருவனின் வாழ்வும் பண்பாடு அடைய வேண்டும். தனக்கும் **இனத்திற்**கும் நன்மை செய்யும் கருவியாகத் தன்னை அமைத்துக் கொள்ள வேண்டிய உள்ளப்பாங்கையும் அறிவாற்றலையும் ஆண்டவன் மனிதனுக்கு அளித்திருக்கிறான். **மன்பதை** அமைப்பில் புதிய மாறுதல் ஏற்பட வேண்டுமானால் ஒவ்வொரு மனிதனும் தன்னைச் சீர்திருத்தி செப்பனிட்டுக்கொள்ளவேண்டும். மனிதன் **மன்பதையின்** ஓர் உறுப்பு; ஒவ்வொரு உறுப்பும் ஆக்க வேலை செய்தால்தான் முழுமையாகிய **மன்பதை** முன்னேற முடியும். இந்தக்கருத்தை வலியுறுத்தி ஒவ்வொரு மனிதனும் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக' வாழவேண்டும் என எண்ணும் கருத்து, திருக்குறளில் பல இடங்களில் சங்கொலியென ஒலிக்கிறது.

திருக்குறளின் 1330 பாக்களின் கருத்து தொகுப்பை ஏதேனும் ஒரு குறளால் விளக்கி **விவரிந்து** விடலாம் என்றால் அது **இயலாச் செயலாம்** ஆனால் திறக்குறளைப் படிப்போர் ஒவ்வொருவருச்கும் அவரவர் உளப்பாங்கின்படி சில குறட்பாக்கள் பசுமரத்தாணிபோல் உள்ளத்தில் பதிந்து விடுகின்றன. அவ்வாறு என் உள்ளத்தில்பதிந்து என் உள்ளத்தில் அழியாமற் பொறிக்கப்பட்டுள்ள குறள்பாக்களுள் கீழேவரும் இரண்டு பாக்கள் குறிப்பிடத்தக்கன.

''நல்லாறு உள்ளும் கொள்ளல்
தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று''
''இரந்தும் உயிர்வாழ்தல்
வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்''

என்றாலும் திருவள்ளுவரின் பல்வேறு கருத்துக்களின் திரண்ட முடிவை,

''பகுத்துண்டு பல்லுயிர்
ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள்
எல்லாம் தலை''

என்ற குறள் மணி சுடர் விட்டு விளக்கிற தென்று சொல்லலாம். இந்தக் குறள்மணி, நந்தா விளக்காக, உலக மக்கள் அனைவருக்கும் அறிவு ஒளி வீசி வருவதாக!

வாழ்க திருக்குறள்.
வாழ்க மனித குலம்.

நம்மைச் சுற்றி

ஆள்வோர் மன்றில் ஆன்றோர் வள்ளுவர்

"குறள் நெறி பரவின் குடியரசு ஓங்கும்" என்பது நம் குன்றாக் கொள்கை. நாட்டில் உண்மைக் குடியரசு தோன்றி, மக்கள் நலனுக்காக மக்களே ஆளவேண்டும் என்பது உறுதிப்பட வேண்டுமானால் கட்சி வேற்றுமைகளை மறந்து வள்ளுவர் நெறியில் மாநிலங்கள் ஆளப்படல் வேண்டும். ஆகவே மாநில ஆட்சி மன்றில் வள்ளுவர் திருவுருவப்படம் நிலை கொள்வது மிகவும் பொருத்தம் உடையதாகும்.

வாழ்வியலின் ஒரு பகுதியாக அரசியலை வகுத்துரைத்த வள்ளுவர் பெருமானின் திருவுருவப்படமும் திருக்குறளும் முன்பே அங்கு இடம் பெற்றிருத்தல் வேண்டும். செய்யாமலிருப்பதினும் காலம் தாழ்த்துச் செய்வதும் சிறப்புடையதாகும் என்பதற்கு ஒப்ப இப்பொழுதேனும் திருவள்ளுவரின் சீர்த்தி யறிந்து அவரைப் போற்றத்தலைப்பட்டமை யறிந்து மட்டிலா மகிழ்ச்சி யடைகின்றோம். வள்ளுவர் படத்தை அங்கு வைத்துப் போற்றுவதற்குக் காரணமாயிருந்தோர் அனைவரையும் வாயார மனமார வாழ்த்துகின்றோம்.

திருவள்ளுவர் படத்தை அங்குத் திறந்து வைப்பதற்கு இந்திய அரசின் தலைமை யமைச்சர் மிகவும் பொருத்தமானவர். அண்மையில் திருக்குறள் பற்றிய நூல் ஒன்றை அன்னார் வெளியிட்ட காலத்து திருக்குறளைப் பற்றியோ திருவள்ளுவரைப் பற்றியோ ஒரு சொல் கூடக்கூறாமை யறிந்து மிக மிக வருந்துகிறோம். அதற்குக் கழுவாயாக இங்கு வள்ளுவரின் உண்மைப் பெருமைகளை உணர்ந்து வாயாரப் போற்றுவார் என எண்ணி உவகை கொள்கின்றோம்.

குடி தழீஇக்கோலோச்சும் கோன் முறை கூறும் திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைத்தல் மட்டும் போதாது. அவர் கூறியுள்ள அறிவுரையைக் கொள்வதற்கு நம் உள்ளம் திறக்கப்படல் வேண்டும். வள்ளுவரின் உரைவழியே மாநிலத்தை ஆள்வோம் என்று உறுதி கொண்டு சூளுரை எடுக்க வேண்டும். சட்ட மன்றில் உறுப்பினராய் அமர்வோரும், அமைச்சரவையில் அணியிடம் பெறுவோரும் திருக்குறளைக்கையில் ஏந்தித்திருவள்ளுவர் முன்னிலையில்,

"ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை" என்பதனை உளத்தில் கொண்டு கடனாற்றுவோம், என உறுதி மொழி எடுத்தல் வேண்டும்.

காலப்போக்கில் கட்சிகள் மறைந்து குறள் நெறியில் ஆளும் மக்களாட்சி முறை மலர்வதாக. வள்ளுவர் நெறியில் வையகம் வாழ இந்நிகழ்ச்சித் துணை புரிவதாக. வள்ளுவர் போற்றிய வண்டமிழ் தனக்குரிய இடத்தை அடைவதாக.

இந்தியால் தமிழ் கெடாதா?

"இந்தியின் வளர்ச்சி வட்டார மொழிகளைக் கெடுக்காது" என்று இந்தியின் ஆர்வலர்கள் எங்குச் சென்றாலும் கூறுகின்றனர். ஆனால் இந்தியின் எத்தகை வளர்ச்சி என்பதனை அன்னார் எடுத்துரைப்பதில்லை. இந்தி வழக்கு மாநிலத்தில் இந்தி வளர்வதால் ஏனைய மொழிகளுக்குக்கேடு இல்லை தான். ஆனால் இந்தி வழங்காத பிறமாநிலங்களில் இந்தி ஆட்சி மொழியாகவும், அறிவூட்டும் கல்வி மொழியாகவும், அறம் கூறும் அவை மொழியாகவும் வளருமேயானால் பிறமொழிகளுக்குப் பெருங்கேடுதானே. இன்று இந்தி மொழியைக் கற்க வேண்டும் என்று கூறுபவர்கள் கூட "இந்தியைப் படிக்க வில்லையேல், இந்தியப் பேரரசின் அலுவல்களில் அமர்தல் இயலாது; ஆதலின் அதனைத் தவறாது படித்தல் வேண்டும்" என்று தானே இயம்புகின்றனர். வேலை வாய்ப்புக்கு இந்தி என்றால் வீட்டிலும் அவ்விந்திதானே இடம்பெறும். இந்தியக் கூட்டரசின் இணைப்பு மொழி என்று கூறப்பட்டு எல்லாத்துறைகளிலும் இந்தி இடம்பெறத்தான் போகின்றது அங்ஙனம் இடம் பெறுங்கால் பிற மாநிலமொழிகள் அவைகளின் மாநிலங்களிலேயே புறக்கணிக்கப்படும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. ஆங்கிலம் ஆளும் மொழியாக வந்ததன் வினைவால் நம் அன்னை மொழிகள் அடைந்த இழிநிலையை யார் தாம் அறியார்? ஆகவே இந்தி அதற்கு உரித்தல்லாத மாநிலங்களிலும் ஆட்சி மொழியாக வளருமேல் அந்தந்த மாநில மொழிகள் மெல்ல மெல்லச் சாகத்தான் போகின்றன. ஆதலின் இந்தி வளர்ந்தால் பிறமொழிகட்குக் கேடு இல்லை என்பது ஓநாய்கள் பெருகுவதனால் ஆடுகட்குக் கேடில்லை என்பது போன்றதாகும்.

"ஆங்கிலத்தின் இடத்தில் இந்திதான் அமரும்" என்றும் "இந்தி ஏனைய மொழிகளின் அக்காள்" என்றும் தெளிவுபட இந்திய முதல் அமைச்சர் அவர்கள் கூறிவருகின்றார்கள். ஆகவே இந்நாட்டில் இந்திதான் தலைமைபெறும்; இந்திக்குத்தலைமை என்றால் ஏனைய மொழிகட்கு அடிமைவேலைதானே. அடிமை நிலை மொழிகள் விரைவில் அழிந்துஒழியும் என்பது வரலாறு காட்டும் உண்மையன்றோ?

நகர் மன்றத் தேர்தல்கள்

'நகர்' என்பது தூய தமிழ்ச் சொல். அழகிய பெரிய வீடு என்னும் பொருளினைத் தரும் இச்சொல் பின்னர் காலப்போக்கில், அவ்வீடுகள் நிறைந்த இடத்தைச் குறிக்கத் தொடங்கியுள்ளது. ஆதலின் நகர் அல்லது நகரம் என்பது பெருமாளிகைகள் நிறைந்த பேரழகு மிக்க பகுதி என்பதா[illegible]ம். நகரம் என்றும் அழகுமிக்கதாக இருத்தல் வேண்டும் என்று பண்டைத்தமிழர் அதனை நன்கு போற்றி வந்தனர். அதனால் அக்காலப் புலவர்கள் பெண்ணின் அழகுக்கு நகரத்தையே உவமையாக ஒப்பிட்டுக் கூறியுள்ளனர். "நகர் நல்லழகு பெறல் வேண்டும்" என்ற கொள்கை நம்மவரால் பண்டு

தொட்டே போற்றப்பட்டு வந்துள்ளது. பண்டைய நகரங்கள் நல்லழகு மட்டுமின்றி "வாரியங்கள்' என்ற நல்லாட்சி மன்றங்களையும் பெற்றிருந்தன. இன்றைய நகரங்கள் எவ்வாறு இருக்கின்றன என்பதை நாம் அறிவோம். சில, 'நரகங்கள், ஆகவே இருக்கின்றன என்பர். நகரங்கள் நகரங்களாக விளங்குவதற்கு ஆகும் பணிகளைச் செய்வனவே நகராட்சி மன்றங்கள். நகர்மன்ற உறுப்பினரை **நகரத் தந்தை** என்று அழைப்பது சாலப் பொருந்தும். நகரத் தந்தையரைத் தேர்ந்தெடுப்பதில் நகரமக்கள் மக்களாட்சி முறையில் கட்சிகள் இருத்தல் வேண்டும் என்பது நாட்டாட்சி முறைக்குப் பொருந்து மென்றாலும் நகராட்சிக்குப் பொருந்தாது' ஆதலின் நகரப்பெருமக்கள் கட்சிகளை மறந்து நகர நலனுக்குத் தொண்டாற்றும் நல்லோரையே தேர்ந்தெடுப்பாகளாக. நகரத்தந்தையாக வருவோர் நற்றமிழ்ப்பற்றுடையராகவும் குறள் நெறியில் ஒழுகக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். "நகை, ஈகை, இன்சொல், இகழாமை நான்கும். வகையென்ப வாய்மைக் குடிக்கு என்பது குறள்நெறி. நகரத்தந்தையாக வருவோர் இந்நான்கு நல்இயல்புகளும் பெற்ற நல் வாய்மைப் பெரியோராக இருப்பார்களாக. "நகர் நலனே நம் நலன்.

வாழ்த்து

தமிழ்க் கலை இல்லம்,
சென்னை-30,
23-12-63.

அன்புடையீர்,

வணக்கம். 'குறள் நெறி' வெளி வருவதறிந்து மகிழ்ந்தேன். வள்ளுவர் வகுத்த குறள் நெறி என்று வாழ்விடை மலருகின்றதோ, அன்றுதான் நாடு நாடாகும். உலகம் சிறக்க வேண்டுமானல், மக்கட் சமுதாயம் அஞ்சாது தலைநிமிர்ந்து உளநிறைவோடு ஓங்கவேண்டுமானல், -எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டிய நல்ல வாழ்வு நாட்டில் தழைக்க வேண்டுமானல் -'குறள் நெறி' உலகெங்கனும் -நாடு முழுவதும் பரவ வேண்டும். இன்று தங்கள் 'குறள் நெறி' ஏடு நாட்டில் தவழத் தொடங்குகின்றது. இக் 'குறள் நெறி' யைத் தங்கள் ஏடு வீட்டு நெறியாக. நாட்டு நெறியாக -உலக நெறியாகச் சிறந்தோங்கும் வகையில் பணியாற்றிச் சிறப்பதாக! தங்கள் பணி சமுதாயத்திற்கு ஏற்ற பணி-சமுதாயம் ஏற்றுக் கொள்ளவேண்டிய பணி. தங்கள் பணி தழைத்தோங்குக! வாழ்க குறள் நெறி! வளர்க குறள் அறம்!

அ. மு. பரமசிவானந்தம்,
தமிழ்த்துறைத் தலைவர்,
பச்சையப்பன் கல்லூரி,

அன்பர் அஞ்சல்

தமிழாசிரியர் அவலநிலை

அன்புகெழுமிய ஐயா, வணக்கம்.

தமிழாசிரியரின் நிலை குறித்துத் தமிழக அரசின் நினைவிற்கும், தமிழ் மக்களின் ஆராய்ச்சிக்கும் சில கருத்துக்களைக் கொணர விழைகின்றேன்.

நம் தமிழகத்தில் நற்றமிழ்ப் புலமையை உருவாக்கவும், தமிழ் இலக்கண இலக்கிய அறிவூட்டவும் தமிழ்க் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகளில் முறையாக நான்காண்டுகள் பயின்று, வெற்றி பெற்ருேர்க்கு, சென்னைப் பல்கலைக் கழகம் 'வித்துவான்' என்னும் பட்டத்தையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 'புலவர்' என்னும் பட்டத்தையும் வழங்குகின்றன.

இக்கல்லூரிகட்கு மாணக்கர்கள் ஏனைக் கலைக் கல்லூரிகட்குப் போட்டியிட்டுக்கொண்டு செல்வதுபோலச் செல்வாரல்லர். ஏனெனில்,

கலைக் கல்லூரியில் பள்ளியிறுதி வகுப்பில் வெற்றி பெற்றுச் சேர்ந்து பயிலும் மாணக்கர், **பின் தங்கிய வகுப்பைச் சார்ந்திருப்பின்** மாநில அரசு உதவித் தொகை அளிக்கிறது. ஆனல் தமிழ்க் கல்லூரி மாணக்கர்க்குப் **பின் தங்கிய வகுப்பைச் சார்ந்திருத்தலோடு** அரசினர் அல்லது பல்கலைக் கழகத் தேர்வுகளில் **முதல் வகுப்பு மதிப்பெண் பெற்றிருந்தாற்ருன்** மாநில அரசு உதவித் தொகை அளிக்கிறது.

அடுத்து தமிழ்க் கல்லூரிகளில் நான்காண்டுகள் கற்றுத் தேர்ந்தவர்கள் தமிழாசிரியப்பணி ஒன்றுக்குத் தான் செல்ல இயலும் அப்பணியில் அவர்கட்குக் கிடைக்கும் ஊதியம் இடைநிலை ஆசிரியர்க்குரிய 90+15 வெண்பொற்காசுகளே தமிழாசிரியர்க்குரிய பயிற்சி முடித்து வரினும், முதனிலைத் தமிழாசிரியர்க்குரிய ஊதியம் கிடைத்தல் அரிது. ஆனல் தமிழாசிரியர்க்கு இங்ஙனம் ஊதியம் அளிக்கும் அரசு கலைக் கல்லூரியில் பி ஏ, பி எஸ்சி, போன்ற பட்டங்களைப் பெற்று, ஆசிரியப் பயிற்சியினை முடிக்காத ஆசிரியர்க்கு 140+15 வெண்பொற்காசுகள் ஊதியமாக அளிக்கிறது

இனி, தமிழ்க் கல்லூரி விரிவுரையாளர் கட்கு, கலைக் கல்லூரியில் பணியாற்றும் விரிவுரையாளர்கட்குத் தருவது போன்ற ஊதியம் தரப்படுவதில்லை. இத்தகு நிலைகள் இருப்பின் எங்ஙனம் தமிழைப் பயிலப் பலர் முனைவர்?

'தமிழை ஆட்சி மொழியாக்கி யுள்ளோம், பயிற்று மொழியாக ஆக்கிக்கொண்டிருக்கிருேம்; தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டுகள் செய்கிருேம்; தமிழை அழியாமல் காப்போம்-என்றெல்லாம் முரசு கொட்டுகின்ற தமிழக அரசு, தாய் மொழியின் செம்மை சான்ற இலக்கணங்களையும் இனிமை மிக்க இலக்கியங்களையும், கற்க விரும்புகின்ற மாணககர்களையும், கற்றுப் பணியாற்றுகின்ற ஆசிரியர்களையும் இந்நிலையில் வைத்திருக்கலாமா?

'இங்ஙனம் குறைந்த ஊதியமும் குறைந்த பெருமையும் அளிப்பின் தமிழ்க் கல்லூரிகட்கு மாணக்கர் விரும்பிச் செல்லார்; தமிழ்க் கல்லூரிகளில் மாணக்கர் தொகை குறையும். மாணக்கர் தொகைக் குறைவைக் காட்டித் தமிழ்க் கல்லூரிகளையும் மூடிவிடலாம் இம்முறையில் தனித் தமிழ் உணர்வு வளர்ச்சியை ஓரளவு தடுத்து விடலாம்' என அரசு திட்டமிட்டுச் செயலாற்றுவதாக, தமிழக மக்கள் எண்ணுதற்கு அரசின் செயல்கள் இடமளிக்கின்றனவே!

தமிழகத்தில் தாய்மொழியாம் தமிழ் மொழிக்கு-தமிழ் உணர்விற்கு-தமிழ்க் கல்விக்கு-தமிழ் கற்றவர்க்குச் சிறப்பிருத்தல் முறை. அங்ஙனம் சிறப்பளிக்காவிடினும், பிறமொழி கற்றவர்க்கு அளிக்கும் ஊதியத்தையும் பெருமையையும் தருதல் வேணடும். அதற்கான செயல்களை அரசினர் உளமுவந்து செய்தல் வேண்டும்; என வேண்டுகிறேன்.

அன்பன்,
இனியன். மதுரை.

திருக்குறளில் உருவகம்

(ஆங்கிலப் பேராசிரியர் வீ. ஒப்பிலி M. A.)

தலைப்புக் குறிப்பு.

உருவகம் என்ற சொல்லைப் பொதுவாக ஆங்கிலத்தில் Metaphor என்றசொல்லின் மொழிபெயர்ப்பாகத்தமிழில் பயன்படுத்துதல் வழக்கம். ஆயினும் இக்கட்டுரை முழுவதிலும் இச்சொல் Image என்ற சொல்லிற்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனைக் "காட்சி" யென்று சொல்லலாம். ஆனால் 'காட்சி' யென்றசொல் அகத்தே தோன்றும் உணர்ச்சிக்கு உருக்கொடுக்கும் ஆற்றலை மட்டுமின்றிக், காணப்படும் பொருள் யாவிற்கும் பொதுவான சொல்லாக இருப்பதால், அதை நீக்கி 'உருவகம்' என்ற சொல்லையே Image என்பதன் மொழிபெயர்ப்பாகப் பயன்படுத்தியுள்ளேன்.

முன்னுரை

திருவள்ளுவர் இயற்றிய குறள் ஒவ்வொன்றிலும் 18-ஆம் நூற்றாண்டில் ஆங்கில நாட்டில் புகழ்பெற்ற கவிஞனை அலக்சாந்தர் போப்பென்பாரின் ஈரடிகளிலுள்ள (Heroic Couplets) திண்மையையும், கலை நுணுக்கத்தையும், பொருளடர்த்தியையும் 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெருங் கவிஞரான சேக்சுபியரின் நாடகங்களில் பொதிந்துள்ள ஆழத்தையும், கற்பனையையும், உணர்ச்சியையும் ஒருங்கே மிளிரக்கண்டு மகிழலாம். திருக்குறள் வாழ்வியலுக்கு இன்றியமையாத நற்பண்புகள் அனைத்தையும் எடுத்துச் சொல்லும் நூல். இவ்வாறாகப் படைக்கப்பெறும் இலக்கியம் வெறும் அறநூலாக மட்டுமின்றி கவிதை நலம் மிக்க படைப்பாகப் பொலிகிறது. அறப்பண்புகளை மட்டே கூறும் குறட்பாக்கள் பொருட்செறிவோடு, அமைப்பில் நாம் என்றும் மறக்க முடியாத தன்மை பெற்று நிலவுகின்றன. இத்தன்மை ஒலிநயத்தாலும், இரு மாறுபட்ட பொருளுள்ள குறுஞ்சொற்கள் இணைப்பாலும், அங்கதத்தாலும் தோன்றுகிறது

"இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு".

'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்"

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு".

இவ்வமைப்புக் கொண்ட குறட்பாக்கள் மிகப்பலவாம்.

அமைப்பு நலத்தோடு உவமம் போன்ற அணி நலங்களையும் பல குறள்களில் நாம் காணலாம். ; இவ்வணிகள்யாவும் பாடப்பெறும் பொருளிற்கேற்ப அமைந்த உருவகங்கள் (Images) கொண்டு, மனத்தை ஈர்க்கும் சத்தி வாய்ந்தனவையாய் உள்ளன கவிஞன் ஒரு பொருளைப் பற்றி எண்ணுகையில், அதைத் தெளிவாக்கவல்ல வேறுபொருளை நயத்தோடு எடுத்துச் சொல்வது மரபு இவ்வேறு பொருளே உவமமாகவும், மற்ற அணிகளாகவும் உருவெடுக்கிறது அணியில் காணப்படும் பொருள் வாழ்க்கையில் நாம் காணும் நிகழ்ச்சிகளைப் படம் பிடித்தாற்போல் காட்டும்; அல்லது கற்பனையில தோன்றிய ஒரு நிகழ்ச்சியாகவும் அணியில் உருவகம் அமையலாம். ஐம்புலன்களினாலும் உணரவல்லாத உணர்ச்சியையும் அணியில் தோன்றும் உருவகம் தெள்ளத் தெளிய பளிங்குபோல் நம் கண் முன்னே நிறுத்துகிறது. இவ்வாறு சேக்சுபியரின் நாடகங்களில் விளங்கும் உருவகங்கள் அனைத்தையும் தொகுத்து அவரது கற்பனைத்திறத்தையும் வாழ்க்கை நுகர்ச்சியையும் எண்ணப் போக்கையும் தெளியக் காட்டும் முறை தற்கால இலக்கிய ஆராய்ச்சி முறையாம். முதன்முதலாக சேக்சுபியர் நாடகங்களுள் தோன்றும் உருவகங்களை இம்முறையில் விரிவாகத் தொகுத்துத் தந்தவர் கரோலின் எஃப் சுபர்சன் (Caroline F Spurgeon) என்ற ஆசிரியர் ஆவார். உருவகங்களைத் தொகுத்துப் பார்க்கையில், அவை சேக்சுபியரின் அகத்தே தோன்றும் உணர்ச்சியிலும், எண்ணத்திலும் நம்மை ஆழச்செய்கின்றன. பல்வேறு இடங்களில் பயன்படுத்தப்படும் உருவக அணிகள் குறிப்பிட்ட சில எண்ணங்களையோ, உணர்ச்சிகளையோ எடுத்துக்காட்டும் சாதனங்களாகத் தோன்றுகின்றன இவ்வாறாக, அரசு கெடும்போது நாட்டைப்பற்றி எண்ணுகையில், சேக்சுபியர் நன்றாகப் பாதுகாக்கப்படாத தோட்டத்தை எண்ணுகிறார் அங்கு களை மலிகிறது; பயன் தரு செடி வாடியழிகிறது; தோட்டக்காரன் வாளாவிருக்கிறான் இவ்வுருவகம் பல்வேறு இடங்களில். சிறப்பாக அமைதிக் குலைவைக்காட்டும் வரலாற்று நாடகங்களில் காணப்படுகிறது மற்றும் தீமையைப் பற்றி எண்ணும்போதெல்லாம், அவர் இருளையும், இருளடைந்த நரகத்தையும், தாங்கவியலாத கெட்ட நாற்றத்தையும் எடுத்துரைக்கிறார். ஓதெல்லோ தனது மனைவியை நடத்தை கெட்டவள் என்று நம்பி அவளைப் பின்வருமாறு ஏசுகின்றான்; "என்னசெய்து விட்டேனென்றா கேட்கிறாய்? சீ! உனது செய்கையின் பயனாய் வானோர் தமது நாசிகளையெல்லாம் அடைத்துக் கொள்கின்றனர்". தீய செய்கையின் கெட்ட நாற்றம் வானையும் முட்டுவதாகக் கற்பனை!

இம்முறையே, உருவகங்களைத் துணையாகக் கொண்டு ஆராயின் நாம் கவிஞரின் அகத்தே நிகழும் உணர்ச்சி நாடகத்தில் ஒன்றிவிடுவோம். இக்கட்டுரையில் திருக்குறளில் நாம் காணும் உருவக அணிகளை ஆராய முற்படுவோம்.

இயற்கையினின்றும் எழுந்த உருவகங்களை முதலில் எடுத்துக் கொள்வோம்.

கடல்: அளவற்று மிகப் பெரியதாகவும் சிறந்ததாகவும் விளங்கும் பொருளைக் கூறுமிடத்து கடல் உருவகம் பொருத்தமாகப் பலகுறட்பாக்களில் தோன்றுகிறது. கடவுள் அறவாழி. பயன் மாராது செய்த உதவி கடலிற் பெரிது. கடலலைகள் பேராரவாரத்துடன் கணத்திற்குக் கணம் மாறி மாறி வருகின்றன. ஊழிக்காலத்தில் அக்கடல் பொங்கியெழுந்து உலகனைத்தையும் அழித்துவிடுமென்றும் சொல்வது மரபு. பெருமை தரும் அளவற்ற தன்மையோடு, ஆரவாரமும் சேர்ந்து கடலின் தூயபெருமையைத் தாழ்த்துகிறது. இதை மனத்திற்கொண்ட திருவள்ளுவர்,

(12-ம் பக்கம் பார்க்க)

குறள் நெறி

மலர் 1 | திருவள்ளுவராண்டு1995 தைஉ (15-1-64) | இதழ் 1

வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க

அறத்துடன் நற்பொருளும் அன்பும் உத்தை
திறன்மிக்க வள்ளுவர் தீந்தமிழ் வெல்க
குறள்நெறி வாழ்க குறுநோக் கொழிக
சிறந்தொளிர்க செம்மை நலம்.

—தமிழ்ப்பேராசிரியர் மு வரதராசனர்

நமது குறிக்கோள்

மக்கள் அனைவரும், கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்து இன்பவாழ்வு எய்தி உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும் சேராது, என்றும் மக்களாகவே வாழ்தல் வேண்டும். இந்நிலையை இனிதிற் பெறுவதற்கு வழிகாட்டுவதே குறள்நெறி ஆகும்

தெய்வப்புலவர் திருவள்ளுவர் யாத்துள்ள திருக்குறள் நெறியில் மக்கள் ஒழுகுவரேல், மாநிலத்தில், போரும் பூசலும் அற்று, 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' எனும் கோட்பாடு நிலைத்து, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் பண்பு சிறந்து. அன்பும் அறனும் அரசோச்சும்; அச்சமும் அவலமும் கனவிலும் உளவாகா. மொழிவழி நாடுகள் அமைந்து, ஆள்வோரும் ஆளப்படுவோரும் இன்றி, படையெடுப்பும் முற்றுகையும் நீங்கி, மக்கள் நன்மைக்காக மக்களால் ஆளப்படும் மக்களாட்சி மாண்புற்று விளங்கும். ஆகவே நாட்டு மக்களை நல்லறமாம் குறள் நெறியில் வாழச்செய்வதே நமது குறிக்கோளாகும்.

இது நிறைவேற யாம் ஆற்றும் தொண்டுக்கு ஒல்லும் வகையால் உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

வாழ்க தமிழ்மொழி; வளர்க குறள்நெறி
உழவர் திருநாள்; புலவர் பெருநாள்
மக்கள் மகிழ்நாள்; வண்டமிழ்ப் பொங்கலில்
எடுக்கும் குளுரை இன்தமிழ் போற்றலே.
பொங்குக பாலே! பொலிக நம்வளம்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரந்து வையகம்
குறள்நெறி போற்றிக் கூடிவாழ்கவே.
குறள்நெறி மலரவும குடியரசோங்கவும்
ஆற்றுவோம் தொண்டே அனைவரும் வம்மின்;
போற்றுவோம் இறையை; பொங்குக இன்பமே,



(டாக்டர் வ. சு. ப. மாணிக்கம்)

வாழ்வு நெறி

1. பலருக்கு ஆராய நூல் வேண்டும், சொற்பொழிவாற்றக் கருத்து வேண்டும் என்பதற்காகத் திருவள்ளுவர் திருக்குறளை இயற்றவில்லை. எல்லாரும் வாழ வேண்டும்; எப்படி வாழ்விப்பது என்ற தலையாய நோக்கமே திருக்குறட் பிறப்பிற்குக் காரணம். இந்நோக்கம் எல்லாக் குறள்களிலும் வெளிப்படக் காணலாம். மிகக் கீழானுர்க்கும் உயர்வுண்டு; இயல்பாகவுள்ளவர்க்கும் மேலுயர்வு உண்டு; மிகவுயர்ந்தார்க்கும் மேன்மேலுயர்ச்சியுண்டு என்ற நம்பிக்கையைத் திருக்குறள் நமக்கு ஊட்டுகின்றது.

தாழ்ந்தாரைப் பார்த்துச் சோர்வடைய வேண்டாம் எனவும், உயர்ந்தாரைப் பார்த்து அமைதியடைய வேண்டாம் எனவும் ஊக்கமும் ஆக்கமும் தருவது திருக்குறள். எல்லோர்க்கும் பொதுவான அறங்களைக் கூறுவது குறள் என்று சொல்லி வருகின்றோம். இது எவ்வளவு தவருன கருத்து? எவ்வளவு வீழ்வான கருத்து? பொதுவறம் கூருது அவரவர்க்குப் பொருத்தமான அறங்கூறுவதே குறள். இதுவே குறளின் தனிச்சிறப்பு. பொதுவறம் செயற்படுமா? பொதுமடம் துப்புரவுப்படுமா?

' நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர், நிதி குறைந்தவர் காசுகள் தாரீர், அதுவுமற்றவர் வாய்ச் சொல் அருளீர்'' என்று பொருள்நிலைக்கு ஏற்ற அறம் பாரதியார் கூறியிருப்பதை அறிவோம். அதுபோல் உலகுபுகழ் வள்ளுவர் ஒவ்வொருவரையும் தனித் தனியாக முன்னேற்றவேண்டி அவரவர் செய்வதற்கு ஏற்ற அறங் கூறியுள்ளார். அறத்திற்காக அறம் எழுதவில்லை அவர். இவ்வுண்மையை இப்போது நாம்தெளிந்துவருகின்றோம். யாரையும் முன்னேற்றிவிடவல்லது முப்பால் என்பதனை ஊரறிய உலகறியத் தெளிவிக்க வேண்டும். 'என்நிலைக்கு ஏற்ற அறம் இந்நூலில் உண்டு; ஆதலால் எனக்கும் முன்னேற்றம் உண்டு' என்னும் மெய்ந்நம்பிக்கையோடு திருக்குறளைப் படியுங்கள்.

2. அறம் எல்லா மக்களும் செய்ய வேண்டிய கடமை. எனினும் இப்படிச் செய்வதுதான் அறம். இவ்வளவு செய்தாற்றான் அறம் என வரம்புகட்டலாமா? வள்ளுவர் அறம் வலியுறுத்திஞரேயன்றி, அதற்கு ஓர் அரண்கட்டவில்லை.

(தொடரும்)



வள்ளுவரும் அரசியலும்

டாக்டர் பா. நடராசன்,
எம்.ஏ., டி.லிட்., எம்.எல்.ஏ.

வாழ்வின் குறிக்கோள் இன்பம். இன்பம் பொருளால வருவது. பொருள் அறத்தால் வருவது. அறமே முதற் காரணம். இன்பமே இறுதி விளைவு, இங்ஙனமாக அறம், பொருள் இன்பம் என மூன்றும் சங்கிலித் தொடராக—காரண காரியங்களாக அமைகின்றன.

இம் மூன்றனுள் பொருள் நடுவணதாக அமைந்துள்ளது பொருள் உண்டாவதற்கும் சிறப்பதற்கும் அறமே அடிப்படைக் காரணமாயினும், அரசியல் இன்றியமையாதஅடுத்த காரணமாகும்; துணைக்காரணமாகும். நல்ல அரசாட்சியுண்டேல் நல்ல பொருளாதாரமும் உண்டு அரசாட்சியின் குறிக்கோள் மக்கள் பொருள் நலம் சிறப்பதேயாகும்

ஏனெனில் ஆட்சியே பொருளை இயற்றுதற்கும், ஈட்டுதற்கும் காத்தற்கும் வகுத்தற்கும் வேண்டும் சூழ்நிலையைப் பயப்பது; நெறியை வகுப்பது; முறை செய்து சட்டத்தையும், அமைதியையும் நிலை நாட்டிப் பொருள் செயல் வகைக்கு அடிப்படையான கோட்பாட்டையும் நாட்டவல்லது.

"இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்"

என்றும்,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்றும் வரும குறள்களில் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டும் இன்றியமையாத அரசியல் உறுப்புக்களை வள்ளுவர் விளக்கிப் போனர்

முதன் முதலாக நாட்டிலே நல்ல அமைதி நிலவுதல் வேணடும். அடுத்துப் பொருளைப் படைத்துத் திரட்டி காத்து வகுக்கும் பொருளாதரக் கோட்பாடு இருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் சொல்வதானல் **Preservation of Law and Order and formation of Progressive Economic Policy** என்ற இரண்டும் வேண்டும் இது நல்ல அரசாட்சியாலேயே பெறப்படும்.

எனவே நிலையான அரசியல் அமைதி,முற்போக்கான பொருளாதார நெறி ஆகிய பொருள் செயல் வகைக்குக் கண்போன்ற இரண்டு உறுப்புக்களும் அரசியலில் அமைய, அரசாள்வோருக்கு என்னென்ன தகுதிகள் வேண்டும் என்பதைப்பற்றியே வள்ளுவர் ஆராயலானர்.

அரச அமைப்பும் இயல்பும்

அவை முடியாட்சியால் வருமா, சில தக்கார் (**Aristocracy** ஆட்சியால் வருமா, குடியாட்சியால் (**Democracy**) வருமா, என்ற கேள்விகளை வள்ளுவர் எழுப்பவே யில்லை.

இன்பமே வள்ளுவர் குறிக்கோள். அந்த இன்பத்திக்கும் பொருள் துணைக்கருவி, அந்தப்பொருளை பெறுவதற்கு அரசியல் அமையும்முற்போக்குப் பொருளாதாரக் கொள்கையுமே அடிப்படை அவற்றை எந்த ஆட்சி நல்க வல்லதோ, அதுவே சிறந்த ஆட்சி என்ற கோட்பாடு உடையவராகவள்ளுவர் இருந்தார் என்றே கொள்ள வேண்டும் (தொடரும்)

[மறைமலையடிகள் தனித்தமிழ் இலக்கியத்தின் தந்தையாவார் அவரைப்பற்றித் தமிழ் மக்கள் அறிதல் வேண்டுமென்று கருதி அவர் நாட்குறிப்பு இவ்விதழில் தொடர்ந்து வெளியிடப்படும். விளக்கம் அவர் திருமகனரால் தரப்படுகின்றது) ஆ-ர்,

மறைமலையடிகளின் நாட் குறிப்புக்களும் விளக்கங்களும்

(வித்துவான் மறை. திருநாவுக்கரசு)

அடிகளார் 25-10-1937 ஆம் நாள் காட்குறிப்பு.

"நாட்டுக்கோட்டைத் தியாகராசச் செட்டியார் பழங்களுடன் என்னைக்காண வந்தார்"

விளக்கம்:— இவரைத் (தியாகராசச் செட்டியாரை) தமிழ்ப் புலவர் என்றே கூறி விடலாம். புலவர்கள்பால் அன்பும். உதவியுமுடையவர். இன்று. தமிழ்நாட்டின் தனிப் பெருஞ்செல்வர் அடிகள் நூல்களை இன்றும் நாடோறுங்கற்கின்றார்.

மதுரையில், தியாகராசர் கல்லூரியைத் தம் உரிமைப்பொருள் கொண்டு நடத்தி வருபவர். நூல் ஆலைகள் பலவற்றின் உரிமையாளர். சிவநெறியின் பற்றுளர். அறங்கள் பலவற்றைத் திறம்பட நடத்துபவர்.

இவர் தம் நன்மக்களாகிய சுந்தரமும்,மாணிக்கவாசகமும் செந்தமிழும், சிவநெறியும் அறிந்தோராவர் அவற்றினைப் போற்றும் புரவலருமாவார். இவர்கள் மூவரும் தமிழ் மக்கள் முன்னேற்றங்கருதிச் செய்யுந் தொண்டுகள் அளவற்றன.

அடிகள் மறைவிற்குப் பின்னர், யான் ஒருபோதுகருமுத்துத்தியாகராசரைப்பார்க்கநேர்ந்தது. அப்போதவர்கள், என்னை நோக்கி, "அடிகள் நூல் நிலையம் எந்நிலையிலுள்ளது?" என்று கேட்டனர். யான் "அது பற்றித்தங்கட்கு எப்படித் தெரியும்?" என்று எதிர்வினவிடுத்தேன். அதற்கு அவர்கள் "நான் பல்லாவரம் போந்து அடிகளைக்கண்டேன். அடிகள் நூல் நிலையத்தை எனக்குக் காட்டினர்கள்" என்றார்.

(தொடரும்)

தமிழ்க் காப்புக் கழகம்

மதுரை-6

நிகழவிருப்பது ; நற்றிணைச் சொற்பொழிவு.

பேசுநர்: புலவர் திரு. அ. மணிவாசகன்
(முதன்மைத் தமிழாசிரியர், பிள்ளைமார் சங்க உயர்நிலைப் பள்ளி)

பொருள் : 'நற்றிணையில் குறிஞ்சித்திணை'

நாள் : 26—1—'64, ஞாயிறு மாலை 6-30

இடம் : மகால்சாலை நகரவைத் தொடக்கப்பள்ளி

மதுரை-சென்னை நகராட்சித் தேர்தல் வழிகாட்டி.

1959 ஆம் ஆண்டு நகரவைத் தேர்தல் முடிவுகளும் 1964 ஆம் ஆண்டு நகரவைத் தேர்தல் வேட்பாளர் பட்டியலும் அடங்கியது. விலை 25 காசுகள்

விவரங்கட்கு

கலைக்கோயில் வெளியீட்டகம்
62, நாயக்கர் புதுத் தெரு, மதுரை.

9ஆம் பக்கத் தொடர்ச்சி

திருக்குறளில் உருவகம் ...

"ஊழி பெயரினும் தாம்பெயரார்
சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்" (989)

என்கிறார்.

இங்கு நற்குணம், அளவற்றுப்பெருகி ஆரவாரமற்று, ஊழிக்காலத்திலும் தன்னிலை மாறாது நிற்கும் கற்பனைக் கடலை, உருவகத்தின் மூலம் நம் கண் முன்னே நிறுத்துகிறார் கவிஞர். தாங்கவியலாத உணர்ச்சிப்பெருக்கும், அதனால் எழும் இன்ப துன்பங்களும் கடலுருக்கொள்கின்றன காம நோய் கடலாகிறது காமக்கடல் கடக்க தோணியில்லையென தலைவி வருந்துகிறாள். தோணியும், கப்பலும் பேரிடனின்று காக்கும்உருவகங்களாகின்றன. கடலையும் தூர்க்கலாம், ஆனால் அன்பற்றவரிடம் துன்பத்தைச் சொல்லிப்பயனில்லை என்று எண்ணுகிறாள். இங்குக்கடலின்வரம்பற்ற ஆழம் சொல்லப்படுகிறது. காமத்தில் மகிழும் இன்பம் கடலாகவும், அது வருத்தும் போது எழும் துன்பம் கடலைவிடப் பெரிதாகவும் சொல்லப்படுகிறது இவ்வாறு கடல் நன்மைக்கும் தீமைக்கும் உருவகமாகிறது.

மேலும், கடல், இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் இம்மண்ணுலக வாழ்க்கைக்கும், உருவகமாகிறது. வாழ்க்கைச் சிக்கலில் கட்டுண்டவர், கடலின் பேரலைகளோடு போராடுபவர். பிறவியே பெருங்கடல் ஆதலால் இக்கடல் பேரிடருக்கு உருவகமாகிறது. இதைக் கடக்க எளிதில் இயலாது. கடக்க முயல்பவருக்குக் கப்பல் தேவை. இக்கப்பல் இறைவனடி என்கிறார் திருவள்ளுவர். சான்றாண்மைக்கு மிகுந்திருந்தால் பிறவிக்கடலில் தோன்றும் ஆரவாரத்தை மட்டே அடக்கலாம். ஆனால் இக்கடலைக்கடந்து கரை சேர, இறைப்பற்று வேண்டும் என்கிறார்.

இனி, இவ்வுருவகத்தை மனத்திற் கொண்டு இடனறிதலில் சொல்லப்பட்ட குறளொன்றைக்காண்போம். (கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும் நாவாயும் ஓடா நிலத்து) "பெருந்தேர் மண்ணின் மீது செல்லும்; கடலின் மீது பயன்படாது; அவ்வாறே கப்பல் நீர் மீது செல்லும்; மண்ணின் மீது பயன்படாது." (496). உருவக முறையில் ஆராய்ந்தால் இக்குறள் உட்பொருள் கொண்டு இலங்குவதைக்காணலாம். மனித வாழ்க்கைக்குத் தேர்போன்றது மனித அறிவும், தொழிலும் ஆகும். ஆயினும் பிறவிக் கடலைக் கடக்கக் கப்பலான இறைவன் துணை வேண்டும். இறைப்பற்று இல்லையானால் வாழ்க்கைக் கடலை அறிவாற்றல் மட்டும் கொண்டு கடக்கவியலாது. "நாவாய் ஓடா நிலத்து" என்ற வரிக்கு இவ்வுருக முறையில் "இறைவன் நிலத்தை ஒட்டியும் ஒட்டாது நிற்கின்றான்" என்ற பொருள் கொண்டால் என்ன? மண்ணுலக வாழ்க்கையையே நம்பி வாழ்வார் தேர் ஒன்றையே துணையாகக் கொண்டுள்ளதாகவும் ஆயினும், இவ்வாழ்க்கை கடலாகத்தோன்றுமிடத்து அத்தேர், பயனற்று-போவதாயும் இக்குறள் எடுத்துக்காட்டுவதாகக் கொள்ளலாம் அல்லவா?

நிலம் அல்லது பூமி:– இப்பூவுலகைத் திருவள்ளுவர் உயிருள்ள **தாயாக** மரபிற்கேற்ப எண்ணுகிறார். அவள் அளவற்ற பொறுமைக்கு இருப்பிடமாய், எண்ணற்ற உயிர்களையும், மற்றெல்லாவற்றையும் தோன்றிய நாள் முதல் சுமையாகத் தாங்குகிறாள். கவிஞனின் மென்மையுடைய மனம் பூமித்தாயின் பொறுமையை எண்ணிப் பல விடங்களில் உருகுகிறது. தன்னை அகழ்வாரையும் புறங்கூறுவோரையும், புகழ் அற்றவரையும், கல்லாரைத் துணை கொண்ட கொடுங்கோலரையும், கண்ணோட்டம் இல்லாதவரையும் ஈட்டிய பொருளை இறுகப்பிடிக்கும் உலோபியையும் இத்தாய் வருந்திச் சுமக்கிறாள். சான்றோர் தமது நிலையில் மாறுபட்டால், இவள் தன் சுமையைப் பொறுக்காது போவாள்-பொறுமையோடு உழைக்காதவரை, நிலம் இல்லை என்று உழைக்காது சோம்பித்திரிவாரை-நிலமகள் கை கொட்டிச் சிரிப்பாள். நிலத்தைப் பயிரிடாதுவிடின், அவள் மனைவி போல் பிணங்குவாள். நிலமகளை மனைவிக்கு ஒப்பிட்டுச் சொன்னது ஒரு குறளில் மட்டும் தான் மற்றெல்லாவற்றிலும் அவள் தாயாக அருள் செய்கிறாள்.

இனி இப்பூமித்தாயின் உருவகத்தை மனத்தில் கொண்டு, பின் வரும் குறளைக்காண்போம்.

"சினத்தைப் பொருளென்று
கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா
தற்று".
(307)

பெருஞ்சினத்தால் நிலத்தை அறைந்தால், கைதான் அழியும்; தாயை அறைந்தால் தான் அழிவான் என்ற உட்பொருள் இக்குறளில் தோன்றுகிறதல்லவா? 'நிலம்' என்ற சொல்லை இக்குறளில் தாயாகஉருவகப்படுத்திச் செல்லாவிடினும், திருவள்ளுவரின் மனத்தில் இக்குறளை எழுதுங்கால், பெருஞ்சினத்தால் தாயைத் துன்புறுத்தும் பாவியின் செயலும், அதனால் அவனுக்கு நேரும் கேடும், தோன்றியிருக்கவேண்டும். [வளரும்]

குறள் நெறி வாழ்க

[கவிஞர் கதி சுந்தரம்]

1 தமிழினமே! எழுந்தார்த்துக் குறளென்னும் கேடயத்தைத்
தாங்கி நின்றே
இமிழ்கடல்சூழ் உலகுய்ய வழிகாட்டு! கலையூட்டு!
எழிலை ஈட்டு!
குமிழியெனும் இளமைதனைக் கொழிதமிழின் குறள்நெறிக்கே
கொடுத்து வாழ்வாய்!
அமிழ்தனைய வளம்பலவும் நாடெய்தும்; ஆல்போலப்
பெருகி வாழ்வாய்!

2 தூளாக்கு வஞ்சகத்தைத் தோள்தூக்கு முயற்சிக்கே
என்று பாடி.
ஆளாக்கும் குறள்நெறியை அவனியெலாம் பரப்பிடுவீர்!
முழக்கம் செய்வீர்!
தாளாற்றிப் பொருள்சேர்ப்பீர்! தருபுகழைப் பெற்றுவாழ்வீர்!
வேற்று நாட்டார்
கேளாத பழங்காலம் கிளைவிரித்தே அறமுரைத்த
குறளே! வாழ்க!!

வள்ளுவர் கூறும் வாய்மை

மு. ஏழுமலை, எம். ஏ.

பொதுவாக உலக வழக்கில் 'உண்மை', 'வாய்மை' என்னும் இரு சொற்களையும் ஒரு பொருள் குறிப்பன வாகவே மக்கள் வழங்கிவருகின்றனர். ஆனால், இவ்விரு சொற்களும் வெவ்வேறு பொருளைச் சுட்டி நிற்பனவாகும்.

உண்மை என்னும் சொல், உள்ளதை அல்லது நிகழ்ந்த ஒன்றைக் குறிப்பது. மாங்காய் புளிக்கும்; கரும்பு இனிக்கும்; மரம் முறிந்தது; இவை அனைத்தும் உண்மைகள். முயல் கொம்பு; வாடாத நறுமலர்; தேயா நிலவு; இவை இல்லாத அல்லது நிகழாத இன்மைப் பொருள்களைச் சுட்டுவன. இதனின்று உண்மை என்னும் சொல் இன்மை என்பதன் எதிர்ச்சொல் என்று இனிது புலனாகின்றது.

ஆனால், வாய்மை எனும் சொல் இன்மையின் எதிர்ப்பொருளைக் குறிப்பதன்று. மாறாக, அது பொய்மை என்னும் சொல்லுக்கு எதிரானதாகும். எக்காலத்தும் நிலை பெற்று, எல்லாராலும் ஏற்புடையதென ஒப்புக்கொள்ளப்பட்டு, யாருக்கும் தீமை சிறிதும் பயவாத வாய்மொழியே—மெய்ம்மையே—வாய்மையாகும். அஃது உள்ளதையோ, நிகழ்ந்ததையோ தவறாது சுட்ட வேண்டும் என்பதில்லை. பொதுவாக யாருக்கும் தீமை விளைக்காத—ஆனால் எல்லார்க்கும் நன்மை பயக்கும்—சொற்களை வாய்மை என்றும், பிறர்க்குத் தீமை தரும் சொற்களைப் பொய்ம்மை என்றும் கொள்ளலாம். இக்கருத்தையே,

'வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்."

என்ற குறட்பாவால் வள்ளுவர் பெருமான் இனிது விளக்குகின்றார்.

செந்நாப் போதாரின் இவ்வுயரிய கருத்துப் பின்வரும் எடுத்துக்காட்டால் இனிது விளங்கும். வழிப்போக்கன் ஒருவன் கைப்பொருளுடன் கானகத்தினூடே தனிமையில் சென்று கொண்டிருந்தான். கொலைக்கஞ்சாத கொடிய கள்வர் சிலர் அவனை வழி மறித்து, கைப்பொருளைப் பறித்துக் கொண்டனர். அத்துடன் அமையாது அவனைக் கொல்லவும் துணிந்தனர். உயிருக்கு அஞ்சிய வழிப்போக்கன் வெருண்டு ஓடி அருகிருந்த குடிசை ஒன்றில் அடைக்கலம் புகுந்தான். அங்குத் தவஒழுக்கம் மேற்கொண்டு வாழ்ந்திருந்த முனிவர் நடந்ததை அறிந்தார். வழிப்போக்கன் உயிரைக்காக்க அவனை ஒரு தாழியின் கீழ் மறைத்து, அதன்மேல் புலித்தோலிட்டு அமர்ந்தார். கள்வர்கள் குடிசையுள் புகுந்து, வழிப்போக்கன் எங்குற்றனன் என்று முனிவரை வினவினர். உண்மை கூறின் வழிப்போக்கன் கொல்லப்படுவான். எனவே உள்ளதைச் சொல்ல முனிவருக்கு மனம் வரவில்லை. ஆயின், நெஞ்சறிந்த ஒன்றை மறைத்து இல்லது கூறவும் அவர் மனம் ஒருப்படவில்லை. இறுதியில் உள்ளம் தேறி, அடைக்கலம் புகுந்தோன், உயிரைக் காக்க வேண்டி, "நீங்கள் தேடுபவன் என் புட்டத்தின் கீழ் இருக்கிறான்" என்று முனிவர் நகை செய்து உரைத்தார். கள்வர்கள் மேலுங் கீழும் நோக்கி, முனிவர் வேடிக்கை செய்வதாக நினைத்து அகன்றனர். வழிப்போக்கன் உயிர் தப்பினான்.

முனிவர் இங்கு நிகழ்ந்ததை—உள்ளதை—அவ்வாறே கூறவில்லை. என்றாலும் அவர் வாய்மொழியால் யாருக்கும் தீமை நேரவில்லை. அதே நேரத்தில் வழிப்போக்கன் பெருநன்மை அடைந்தான். எனவே. முனிவரின் கூற்று யாதொன்றும் தீமையிலாத சொல்லான வாய்மை யாயிற்று.

எனினும், இங்கு ஒரு தவறான கருத்திற்கு நாம் இடமளித்து விடக்கூடாது. யாதெனில் நன்மை தரும் சொல்லாயின், அது பொய்யாக இருந்தாலும், வாய்மை என்று கொள்ளத் தகும் எனச் சிலர் மேற்போக்காகக் கூறுவதை நாம் ஏற்புடையதென்று கொள்ளுதல் ஆகாது. இவ்வாறு கருதுபவர்கள், துரோணருக்கு இறுதி விளைக்கும் நோக்கத்துடன், 'அசுவத்தாம ஹத குஞ்சர" என்றுகவர் பொருள்படத் தருமர் கூறியது வாய்மையே என்று நிலை நாட்ட முயல்வர். ஆனால், தருமரின் கூற்று, வள்ளுவர் இலக்கணப்படி, வாய்மையாகாது. ஏனெனில், தருமரின் வாயுரை பாண்டவர்க்கு நன்மை விளைத்த போதிலும், துரோணருக்கும் அசுவத்தாமருக்கும் அது பெருந் தீமை பயந்தது. எனவே, தருமரின் மாற்றம் வாய்மையின் மாறுபட்டதாக முடிந்தது. இவ்வுண்மையை,

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்."

என்னும் குறட்பா தெளிவாக விளக்குகிறது. அஃதாவது, குற்றம் சிறிதும் கலவாத, எட்டுணையும் தீமை இல்லாத, நன்மை பயந்தால் மட்டுமே பொய்ம்மை 'வாய்மை' என்று கொள்ளத்தகும் என்பது வள்ளுவர் கருத்து.

இவ்விரு அருங் குறட்பாக்கள் மூலம், உண்மையினும் உயர்ந்த வாய்மைக்கு இலக்கணங் கூறி, அதன் நல்லியல்பை வள்ளுவர் பெருந்தகை இனிது விளக்கியிருக்கும் பெற்றி அறிஞரால் நினைந்து இன்புறற்பாலதாகும்.

எங்கள் கம்பெனியில் சந்தனாதி அரைக்
கீரை விதை, குளிர்தாமரை, பொன்னாங்
கண்ணி, தைலங்களும் சந்தனம், பன்னீர்
குங்குமப்பூ வகைகளும் மொத்தமாகவும்,
சில்லரையாகவும் கிடைக்கும்.

K. M. K. கார்த்திகேயன் கம்பெனி

திருப்பரங்குன்றம் S. Ry.

முதல்நூலும் முதல்வனும்

—(திருக்குறளார், விழுப்புரம்)—

1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் '**அனைத்தறன்**' ஆகுல நீர பிற.

2. '**அந்தணர்**' என்போர் **அறவோர்** மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்.

3. '**அறவாழி அந்தணன்**' தாள்சேர்ந்தார்க்கு அல்லால் பிறவாழி நீந்தல் அரிது

உலகில் பல்வேறு மொழிகளிலும் எழுதப்பட்டுள்ள நூல்களுக்கெல்லாம் முதன்மையாக இருப்பது திருவள்ளுவர் அருளிய திருக்குறளாகும் காலத்தினுல் சொல்லுவதென்பதல்லாமல், கருத்தினுலும் சொல்லப்படுவதாகின்றது

உலகில் காணப்படுகின்ற நூல்கள், ஒவ்வொன்றும் ஒவ்வொரு துறையினையே கருத்துட்கொண்டு எழுதப்பட்டுள்ளன தெய்வீகம் பொருளாதாரம், அரசியல், காதல் வாழ்க்கை, இல்லறம், துறவறம் இவ்வாருக ஒவ்வொன்றில் நின்று எழுந்த நூல்களாகவே காணப்படுகின்றன. ஆனுல் திருக்குறளோ, மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு உண்மைகளையும் எக்காலத்திற்கும் பொருத்தமான தன்மையில் சுருக்கியும் விளக்கியும் கூறுவதால் முதல் நூல் என்று சிறப்பிக்கப்பட்டு வருவதாயிற்று

'அறம்' என்ருல் என்ன வென்பதனை ஒரு குறட்பா தெளிவுபடுத்துகின்றது மனதில் தீய எண்ணங்கள் எனப்படுகின்ற அழுக்குகள் (குற்றஙகள் இல்லாதிருப்பதே அறமாகும். மனதிலே குற்றங்களை வைத்துக்கொண்டு பிறர் அறிய வேண்டிச் செய்கின்ற செயல்களெல்லாம் பயனில்லாதவைகளே யாகும் அப்படிச் செய்வன (ஆகுல நீர) ஆரவாரத் தன்மையுடையனவே யாகும். எனவே 'அறம்' என்பது விளககப்பட்டது

அடுத்தபடியாக 'அந்தணர்' என்று கூறப்படுவோர் யார்? அவர்களையே அறவோர் என்றும் கூறுகின்றேம். அறம் என்பது மனந் தூய்மையாயிற்று மனந் தூய்மை பெற்றவர்கள் அறவோர் எனப்பட்டனர். ஏன்? அறவழியில் செல்லுபவராயினர் மனந் தூய்மைபெற்ற அறவோர்கள் உலகில் வாழ் எல்லா உயிர்களுக்கும் நன்மையே செய்வர், தீமையென்பதை நினையார், எனவே அறவோர் என்று குறிக்கப்பட்டவர்களே அந்தணராயினர் ஆதலால் செந்தண்மைபூண்டொழுகும் அந்தணர் யார் என்பதைக் கண்டோம் அடுத்து,

இறைவன் வாழ்த்து—கடவுள் வாழ்த்து—என்று குறிக்கப்படும் முதல் அதிகாரத்தில் உலகிற்கெல்லாம் ஒரு பொருள் முதலாயுள்ள மெய்ப் பொருளினை வாலறிவன் என்றும் ஆதிபகவன் என்றும், மற்றும் ஒழுக்க முதலான தன்மைகளால் ஆசிரியர் விளக்கிப் பேசுகின்ருர். அவ்வாறு விளக்கப்படுகின்ற இறைவனை அறத்தின் வடிவாகவே குறிக்கின்ருர். 'அந்தணன்' என்னும் பெயரில் அழைக்கின்ருர்.

"அறமே கடலாக—அறக்கடலான இறைவனை என்றென்றும் உள்ளத்தில் நிறுத்தி வாழாதவர்கள் துன்பங்கள் என்ற கடலினைக் (பிற-ஆழி) கடக்க முடியாது துன்பங்களினின்றும் விடுபெற முடியாது" — இக்கருத்தினை மூன்ருவது (மேலே கண்ட) குறட்பா உணர்த்துகிறது அறம் என்பதனை விளக்கி அறவழியில் நிற்கும் அந்தணனைக் குறித்துக் காட்டி, அறம் நிறைந்த அந்தணத் தன்மையே இறைவன் என்பதனையும் சுருக்கமாகத் தந்த திருவள்ளுவரின் முறை உய்த்துணர வேண்டியதாகும். திருவள்ளுவர் தாம் விளக்குகின்ற கருத்துக்களை எவ்வளவு எளிதில் விளங்குமாறு செய்கின்ருர் என்பதற்காகவே இக்குறிப்பான முறையினைச் சுட்டிக் காட்டுகின்றேம்.

மாநில மொழிகள் வட்டார மொழிகளா?

இந்தியைத் தேசிய மொழி என்றும் ஏனைய மொழிகளை வட்டார மொழிகள் என்றும் கூறிவருகின்றனர். இக்கூற்றுப் பொருந்தாக் கூற்றேயாகும்; மாநில மொழியை இழிவுசெய்வதும் ஆகும். இந்தியைப்போல் ஏனைய மாநில மொழிகளும் தேசிய மொழிகளே ஆதலின் நம் மொழிகளை வட்டார மொழிகள் என அழைப்பதைக் கைவிடுதல் வேண்டும்.

"குறள் நெறி"

16 பக்கங்கள் : தனி இதழ் விலை 25 புதுக்காசு
ஆண்டுக் கட்டணம் ரூ. 5

விளம்பரக் கட்டணம்.

முழுப்பக்கம் இருவண்ணம்	ரூ.	100
ஒருவண்ணம்	ரூ.	75
அரைப் பக்கம்	ரூ.	50
கால் பக்கம்	ரூ.	30

தவணை முறையில்

சைக்கிள்
மின்சார விசிறிகள்
ரேடியோக்கள்

வேண்டுமா?

எங்கள் விற்பனை நிலையத்திற்கு
ஒரு முறை வருகைதாருங்கள்.

சைக்கிள் கஸ்டமரீஸ்

32B-மேல வெளி வீதி
எட்வர்டு ஹால் கட்டிடம்
மதுரை-1

திருக்குறள் கற்று தீந்தமிழ் வளர்ப்போம்.

‘பூங்கோதை’ (தொடர் கதை)

வித்துவான் மு. இராமகிருட்டினன், எம். ஏ., பி. டி.

சிவக்கொழுந்து, மருத்துவமனைத் தாழ்வாரத்தில் வருத்தத்தோடு நின்று கொண்டிருந்தார். ஒவ்வொரு விநாடியும் அவருக்கு ஓர் ஊழியாகத் தோன்றிற்று. மகப்பேற்றறையிலிருந்து குழந்தைவீறிட்டழும் குரல் கேட்டது. அப்பொழுது சிவக்கொழுந்தினது முகத்தில் வருத்தத்திற் கிடையே ஒரு மகிழ்ச்சிக் குறி தோன்றியது. அவர் மருத்துவப் பணிப்பெண்ணின் வருகையை எதிர்நோக்கிய வண்ணமிருந்தார். சில மணித்துளிகள் கடந்தன. மருத்துவப் பணிப்பெண் வெளிவந்து. சிவக்கொழுந்தைப் பார்த்துத் தான் சொல்ல வந்ததைச் சொல்வதற்குத் தயங்கினாள் பிறகு. சிவக்கொழுந்தை நோக்கி. அப்பணிப் பெண், ‘‘பெண் குழந்தை பிறந்திருக்கிறது உங்களுடைய அம்மாவின் சாயலாக இருக்கிறது’’ என்றாள்.

குழந்தையைப் பெற்ற தாயின் நலத்தைப் பற்றி அவள் ஒன்றும் தெரிவிக்கவில்லை. அதைப் பற்றிச் சிவக்கொழுந்து எண்ணிக்கொண்டிருக்கும் அளவில், சிவக்கொழுந்தின் தாயார், மகப்பேற்றறையிலிருந்து வாய்விட்டுக் கதறியழுகின்ற ஓலம் கேட்டது ‘என்ன நடந்தது’ என்பதைச் சிவக்கொழுந்து அறிந்து கொண்டார்.

சிவக்கொழுந்திற்கும் சண்பகம் ஒரே தங்கை. அவர் தம் தங்கையை அவளுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே அன்பாகத் நடத்தி வந்தார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் அவளுக்குச் சீரும் சிறப்பும் பொருந்த மணம் செய்வித்தார். சண்பகத்தை மனைவியாக ஏற்றுக் கொண்ட செந்திலப்பர் அவளுக்கேற்ற அன்பும், பண்பும் அழகும் ஒருங்கே அமையப் பெற்றவர். அருந்தமிழ் நூல்களை ஆழ்ந்து கற்றவர். அவர் தமிழ்க்கல்லூரி ஒன்றிலே ஆசிரியராகப் பணி புரிந்து வந்தார். கணவனும் மனைவியும் கவவுக்கை நெகிழாது வாழ்க்கை நடாத்தி வந்தனர். அழகு மிளிரப் பூத்துக் குலுங்கும் மலர்களைக்கண்டு மகிழ்கிறோம். அவை வாடி உதிர்வதற்குச் சின்னாட்கள் ஆகும். அதற்கிடையிலேயே அவை பறித்தெறியப் படுவதும் உண்டு. அதுபோலவே செந்திலப்பரின் இன்ப வாழ்வும் எதிர்பாராத வகையில் முடிந்தது.

சண்பகம் கருவுற்றிருந்த மூன்றாவது திங்களிலேயே அவளது இல்வாழ்க்கையில் இருள் கவிந்தது. கணவனை யிழந்த சண்பகம் தனது தமையன் இல்லத்திலேயே வாழ்வாளாயினாள். அவள் தானிருந்த ஈருயிர் நிலையை எண்ணியே தன் உயிரை மாய்த்துக் கொள்ளா திருந்தாள். சண்பகத்தின் தாய் பூங்கோதையம்மாள் எல்லாம் சிவனருள்’ எனத்தன் மகளுக்கு ஆறுதல் கூறி வந்தாள், பொறுத்திருந்த சண்முகம் தான் பொறையுயிர்த்த நாளன்றே தன் கடமை தீர்ந்ததெனத் தன் கணவன் திருவடியைச் சென்று சேர்ந்தாள்.

சிவக்கொழுந்து தன் தந்தையார் விடுத்துச் சென்ற வாணிகத்தையும், நில புலன்களையும் கூர்த்த மதியோடும், அயராத ஊக்கத்தோடும் கவனித்து வந்ததால் செல்வச் சிறப்புடையவராகவே வாழ்ந்து வந்தார். குயிற்பொதும்பர் என்னும் அவரது சிற்றூரில் வாழ்ந்து வந்தவர் யாவரும், அவரைப் பெருமையாகவே மதித்து வந்தனர். ஆயினும் அவருடைய உள்ளத்தில் மட்டும் அமைதி நிலவுவது முயற்கொம்பாக இருந்தது. உள்ளது என் இல்லவள் மாணுக் கடை?

சிவக்கொழுந்திற்கு மனைவியாக முளைத்த செங்கமலத்தம்மையார், சென்னை மாநகரின் செல்வச் சிறப்பிலே தோன்றி வளர்ந்தவள். குழவிப் பருவத்திலிருந்தே ஆங்கிலமும் தமிழும் விரவிய மொழியில் பெருமையெனக் கருதிப் பயின்றவள் ஆடை அணிகலன்கள் அணிவதும், ஆரவாரமாகப் புறம்போந்து உலவுவதும். வாழ்க்கையின் சிறந்த கூறாகக் கொண்டு ஒழுகி வருபவள். குயிற்பொதும்பரின் வாவியும், வண்ண வண்ண மலர்களும் காவியம் புனைவார்க்குக் கண்கவர் காட்சியாகத் திகழலாம். அணித்தே செல்லும் சிற்றோடை அயர்ந்த உள்ளத்திற்கு ஆறுதல் அளிக்கலாம். ஊரின் நாப்பண் எழுந்திருந்த பிறவா யாக்கைப் பெரியோன் கோயில் சிவனடியார்க்குச் செல்வச் சிறப்பாகத் தோன்றலாம். ஆயினும் செகங்மலத்திற்கு இவை யாவும் யாது பயன் தருவன? ,இவ்வூரில் என்ன இருந்தென்ன? ஒரு திரைப்படக் கூடமாவது உண்டா? இந்தப் பட்டிக்காட்டில் நாகரிகமுடையவர்கள் யார் குடியிருக்க முடியும்?’ என்று செங்கமலத் தம்மையார் அடிக்கடி சலித்துக் கொள்வார்கள்.

சிவக்கொழுந்து யாது செய்வார்? ‘இதுவும் அவன் செயல்’, நாளடைவில் தம் மனைவி திருந்தி விடுவாள்’ என்று எண்ணியிருந்தார். செங்கமலமும் மூன்று பிள்ளைகளுக்குத் தாயாகி விட்டாள். என்றாலும், இளமையில் தான் பயின்ற ஆரவார முறையிலேயே, அவள் தன் வாழ்க்கையை நடத்தி வந்தது மன்றி, தன் குழந்தைகளையும் தன் வழியிலேயே பயிற்றி வந்தாள். . தம் இல்லத்தில் பணிபுரிந்து வந்த ஏவலர்களை இழித்தும் பழித்தும் பேசுவது செல்வர்களது பிறப்புரிமை என்று கருதினாள். இவளுடைய செயல்கள் யாவும் சிவக்கொழுந்திற்கு உள்ளப்போராட்டத்தை உண்டாக்கிக் கொண்டே இருந்தன.

இவ்வாறு அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் நாட்களில்தான், தங்கை சண்பகம் தான் ஈன்றெடுத்த மகவினைச் சிவக்கொழுந்தின் பொறுப்பில் விடுத்துச் சென்றுவிட்டாள். ‘என்னுடைய குழந்தைகளை வளர்ப்பதே எனக்குப் பெரும்பாடாக இருக்கின்றது. போதாக் குறைக்கு எங்கோ கிடந்த இந்த அனாதைச் சனியனும் என் உயிரை வாங்க வந்திருக்கிறது’ என்று புழுங்குவாள் செங்கமலம். அவளுடைய சொற்களைக் காதில் வாங்கிக்கொள்ளாதவர் போல் பூங்கோதையம்மையார், தன் பெயரத்தியாகிய அம்மகவினைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்து வந்தார்.

தாயில்லாப் பிள்ளையை வளர்ப்பது என்பது அத்துணை எளிதா? இரவெல்லாம் கண் விழித்துக் குழந்தையைப் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டி வளர்ப்பதென்பது இளம் பருவத்தினர்க்கும் அரிய தொன்றாகும் அவ்வாறிருக்க, அத்துணைப் பொறுப்பை. பூங்கோதை யம்மையார் தாமே செய்ய இயலுமா? சிவக்கொழுந்து தம் இல்லத்தில் பணியாற்றி வந்த காளியம்மையைத் தம் தாயாருக்கு உதவியாக, அக்குழவியைப் பாதுகாத்து வருமாறு பணித்திருந்தார். செங்கமலத்தின் சீற்றத்திற்கு அஞ்சிய காளி, பூங்கோதையம்மையார்க்கு உதவுவ தென்பது ஏட்டுச் சுரையாயிற்று. இரவும் பகலும் தாமே குழவியைக் கவனித்து வந்ததால், முதுமைப் பருவத்தராகிய பூங்கோதையம்மையார் நாளடைவில் உடல் நலங் குன்றி. ‘காளி, என் ஆருயிர் மகள் சண்பகம் விடுத்துச் சென்ற இவ்வழகுப் பெட்டகத்தை உன் பொறுப்பில் விட்டுச் செல்கிறேன்’ என்று கூறி இறைவன் திருவடி எய்தினாள். (வளரும்)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எங்கள்

★ பொங்கல் வாழ்த்துக்கள் ★

உரித்தாகுக.

வில்ஸன் சோடா பாக்டரி

"லவ்ஸ்" பழரச பானங்கள் தயாரிப்பாளர்கள்

சின்னாளபட்டி, மதுரை; மற்றும் கிளைகள்

சின்னாளபட்டி { போன் : 36, தந்தி : லவ்ஸன்ஸ்

மதுரை { போன் : 2736, தந்தி : லவ்ஸன்ஸ்

வள்ளுவர் பதிப்பகம்

855, வடக்கு இராச வீதி
புதுக்கோட்டை

எங்கள் வெளியீடுகள்:

பேராசிரியர் சி. இலக்குவனர் எம்.ஏ.,
அவர்களின் நூல்கள்

1	திருக்குறள் எளிய பொழிப்புரை விலை	ரூ	2—00
	,, பரிசுப் பதிப்பு	ரூ	2--50
2	தொல்காப்பிய ஆராய்ச்சி	ரூ	5—00
3	பழந்தமிழ்	ரூ	4—00
4	இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்	ரூ	2—50

பிற நூல்கள்

5	அண்ணல் சுப்பிரமணியனார் மணிமலர்	ரூ	3—00
6	திருக்குறள் (மூலம்) கையடக்கப் பதிப்பு	ரூ	0—50

எங்கள் உளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்

★

மதுரை தனிப்பயிற்சிக் கல்லூரி

(Mathurai Tutorial College)

ஜி. கே. எஸ். ரெஸ்ட் ஹவுஸ்,
(காலேஜ் ஹவுஸ் அருகில்)
டவுன்ஹால் ரோடு, மதுரை-1

ஆசிரியரும் வெளியிடுபவரும்: பேராசிரியர் சி. இலக்குவனர், கருமுத்து அகம், மதுரை-6.
அச்சிட்டோர்: கு. திரவியம், மேலாளர் கலைக்கோயில் அச்சகம், 62, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.

பேரிழப்பு

— முத்தமிழ்க்காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம்

கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய இழப்பு, தமிழுக்கும், தமிழர்க்கும், தமிழகத்திற்கும் நேர்ந்த ஒரு பேரிழப்பு. அதுவும் ஈடு செய்யமுடியாத இழப்பு ஆகும். அடுத்தடுத்து நல்லறிஞர்கள் பலரை தமிழகம் இழந்து வருவது பெரிதும் வருந்தத்தக்க ஒன்று.

பாரதிதாசன் அவர்கள் இந்த இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற தமிழ்க் கவிஞன். அவர் இளமையிலேயே தமது ஆசிரியர் தொழிலையும் கைவிட்டு நானறிய நாற்பது ஆண்டுகளாக நற்றமிழுக்கு நற்றெண்டு புரிந்துவந்த நல்லறிஞன். அது மட்டுமல்ல., கவிதை உலகில் ஒரு புதிய திருப்பத்தையே உண்டாக்கிவிட்ட அரும்பெருங் கவிஞன்.

"பாரதிதாசன் கவிதைகள்" எனும் பெயரால் அவரது கவிதைகளிற் சிறவற்றைத் திரட்டி வெளியிடும் முதல் முயற்சியில் டங்குபெற்றவன் நான் என எண்ணும்பொழுது என் உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. அதைவிட அதிக மகிழ்ச்சி உண்டாகிறது, அம் முதல் நூலுக்கு மதிப்டரை வழங்கியதை எண்ணும்பொழுது, அது "பாரதிதாசன் கவிதைகளில் ஒன்றைப்படித்தேன்' அதை, கதைக்காக ஒருமுறை, கவிதைக்காக ஒருமுறை, கருத்துக்காக ஒருமுறை, கற்பனைக்காக ஒரு முறை படித்தேன். அது ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு படித் தேன் எனச்சுவைத்தது" என்டதே. இது நாட்டில் நல்ல பயனை விளைவித்தது.

தமிழகப்புலவர் குழுவின் 2 வது கூட்டம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற் கூடியது. புலவர் பெருமக்கள் நாற்பத்தெண்மரும் தேரேறி ஊர்வலம் வர, அக்கூட்டத்தின் தலைவர் பாரதிதாசன் அவர்கள் யானைமீது அமர்ந்து தஞ்சை அரச வீதிகளில் உலா வந்த காட்சி இன்றும் கண்கொள்ளாக் சாட்சியாக இருந்து வருகிறது. இனி அக்காட்சியை...?

பாரதிதாசனின் தோற்றமே தமிழனின் தோற்றம். அவரது வீரம் தமிழனின் வீரம். அவரது உடம்பில் ஓடிய இரத்தமும் தமிழ் இரத்தம். அவரது உணர்ச்சி தமிழ் உணர்ச்சி. சுருக்கமாகக்கூற வேண்டுமானால்; அவர் விடுகிற மூச்செல்லாம் தமிழ் மூச்சு எனக் கூறிவிடலாம். இவை நிறைந்த கவியே புதுவைக் கவி! அன்று புதுமைக் கவி! நேற்று முதுமைக்கவி! இன்று ...... !

தமிழகத்தின் மண்ணுக்கே ஒரு தனிவீரத்தைக் கற்பித்தவர் பாரதிதாசன் அவர்கள். "கோழியும் தன் குஞ்சுகளை கொத்தவரும் பருந்துகளை சூழ்ந்தெதிர்க்க அஞ்சாத தொல்புவி" என்பது அவரது கவிதை." உயிரினும்சிறந்த 'தமிழ்' என்பதுஅவரது 'கொள்கை.' உயிர் வெல்லமுமல்ல, தமிழும் அல்ல' என்பது அவர் வாக்கு!

தமிழ் தோன்றிய காலந்தொட்டு எத்தனையோ தமிழ்ப் புலவர்கள் இத்தமிழ் மண்ணில் தோன்றியிருக்கிறார்கள். ஆனால், 'தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடாதே' என்ற புரட்சிச் சொற்களைப் புரட்சிக்கவிஞரிடத்தான் கேட்டேன். அத்தகையபுலவனையும் இன்று இத்தமிழ்மண் தன்னுள் புதைத்துக்கொண்டது. இனியேனும் இம்மண்ணிலிருந்து இதுபோன்ற புலவர்கள் பலர் தோன்ற வேண்டும் என்பது எனது ஆசை.

பாரதிதாசனை ஒரு தமிழ்மன்னன் எனலாம். இத்தகையமன்னனை இழந்ததமிழகம் அவர் வாழ்ந்த போதும் சரியாக அறிந்து போற்றவில்லை. அவர் மறைந்தபோதும் சரியாக உணர்ந்து வருந்தவில்லை. இரண்டொரு இரங்கற் செய்திகளோடு அவரது வரலாற்றை முடித்துவிட்டது. இறந்தவர்களுக்கு அனுதாபத்தீர்மானம் போடுவதற்காகவே சில சங்கங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. இறந்தவர்கள்மீது கவிபாடி வெளியிடுவதற்காகவே சில பத்திரிகைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இறந்தவர்களுக்கு இரங்கல் செய்திகளைச்சொல்வதற்கென்றே சிலர் உயிர்வாழ்ந்து சொண்டிருக்கிறார்கள். இம்மூன்றும் திருந்தி அவர்கள் வாழும் காலத்திலேயே அவர்களை வாழ்த்த—— போற்றத் தொடங்கிவிட்டால் தமிழகம்——?

கவிஞர், பாரதிதாசன் தமிழுக்குத்தொண்டன். தமிழர்க்குஅன்பர், புலவர்க்கு நண்பன்; புலவர்குழுவிற்குத் தலைவர்; கவிஞர்களுக்கு வழிகாட்டி; புரட்சிக்கவிஞருக்குத் தந்தை; சீர்திருத்தவாதிகளுக்குத் தலைவன்; தமிழ்ப்பகைவர் முன்னே தோள்கொட்டி தொடைதட்டி நிற்போரெல்லாம் அவரது உறவினர் அவரது பிரிவால் நாம் அனைவரும் கலங்குகிறோம். யார் யாருக்கு ஆறுதல் கூறுவது? மெல்ல நகர்ந்து செல்லும் காலம்தான் நம் அனைவர்க்கும் நல்லாறுதல் அளிக்கவேண்டும்.

அன்பு தமிழ்ச் சொற்பயிற்சி மன்றம்

அமைப்புக் கூட்டம்

பம்பாய்–தாராவி, ஆகாசவாடி எண். 95, 'பேபி மல்லிகா உணவு விடுதியில்" திரு. சோ-சு. செழியன் அவர்கள் தலைமையில், உணவுவிடுதியின் உரிமையாளர் திரு. என். எம். முத்தையா அவர்கள் முன்னிலையிலும் "அன்பு தமிழ் சொற்பயிற்சி மன்றம்" அமைக்கப்பட்டது.

திரு. நெ. லாசர்-முதல்வர், திரு. கு. ந. இராசன்-துணை முதல்வர், திரு. நா. மா. கண்ணன் –பொதுச் செயலர், திரு. சு. வ. குருசாமி–துணைச் செயலர், திரு. நா. ப. அறிவழகன்–பொருளாளர். ஆகியவர்களை நிருவாகிகளாகவும், திரு. வெ. திருமலை நம்பியார், திரு. சு. நயினார், திரு. சு, நடராசன் ஆகியவர்கள் 'படிப்பக' பொறுப்பாளராகவும், திரு. நெ, கனகராசு–தணிக்கையாளராகவும், திரு. மா. மா. சீனிவாசன் (ஓவியன்) விளம்பர எழுத்தாளராகவும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

திரு. என். எம். முத்தையா, திரு. சொ. சு. மணியரசு, திரு. வெ. இராசு ஆகியவர்களின் அறிவுரைக்குப்பின், எல்லா தின. வார, மாத ஏடுகளைப் பெற்றுப் பயனடையவேண்டும் என முடிவுகொண்டு, நா. மா. கண்ணன் நன்றி நவில இனிதே நடந்தேறியது.

தனித் தமிழ்ப் படையின் தளபதி

— நெல்லை ந. சொக்கலிங்கம், பி. ஏ.

தமிழ் தொன்மையும் தோலாப்புகழும் மிக்கதொரு மொழியாம். இனிமையும் எளிமையும் கொண்ட செந்தமிழ் தனித்தியங்கும்தகைமையும் தகுதியும் பெற்ற பண்பட்ட மொழி என்று கால்டுவேலர் போன்ற மேனாட்டார் ஏற்றிப் போற்றும் கூற்றினை மேற்கொண்டு தமிழகத்தில் தனித்தமிழ் இயக்கம் தொடங்கப் பெற்றது. மாண்புமிகு தமிழ் மாற்றாரின் படை எடுப்பால். வேற்றுமொழிகளின் தாக்குதல்களால் புறக்கணிக்கப் பெற்றுப் போற்றுவாரற்றுக் கிடந்த காலத்தில்தான் எழுச்சிகொண்ட இயக்கம் துவண்டெழுந்தது. தனித்தியங்கும் வலிவும் பொலிவும் மிக்க தண்டமிழ் தரணியாளும் பொறுப்பிழந்து தாழ்ந்து கிடப்பதை நீக்கி, அரியணை ஏற்ற ஆட்சி செலுத்துமாறு அணிபெற வைத்தவர்கள் தனித்தமிழ் இயக்கத்தினர். மறை மலை அடிகள் போன்ற தமிழ்ப் பெரும் புலவர்களும் பாரதிதாசனார் போன்ற தமிழ்ப்படையின் தளபதிகளும் தறுகண்மையுடன் முன்னின்று செயல்பட்டனர். எனவேதான், இன்று தமிழ் வென்று நிற்கும்நிலைக்கு உயர்ந்துவிட்டது.

கால வெள்ளத்தில் கனிதமிழில் கலப்பு நிகழ்வது கண்டு மனம் பொறாத மறத் தமிழர் தளபதி "தமிழியக்கம்" கண்டார். அதில் அவர் கூறுவதாவது:—

"'பவன்' 'மண்டல்' முதலியன இனியேனும்
தமிழகத்தில் பயிலா வண்ணம்
அவண் சென்று முழங்கிடுவீர்! ஆங்கிலச் சொல்
இந்திமொழி வடசொல் யாவும்
இவண் தமிழிற் கலப்பதுண்டோ? பிராம்மணர்
கள் உண்ணும் இடம் இப்பேச்சில்
உவப்புண்டோ? தமிழ்மானம் ஒழிந்திடுதே
ஐயகோ உணர்வீர் நன்றே!" — என்று வீறு

சால் உரை நிகழ்த்தி வேங்கையெனத் தமிழர் கூட்டத்தை எழுச்சிக்கொள்ள வைத்தார். தமிழில் தூய்மையுடன் எழுத முடியும்; எழுதினால் அது இனிமையுற இயங்கும். அதனைப் புலவர்கள்செய்ய முன்வர வேண்டுகின்றார் அவர்.

"தனித்தமிழில் தக்கபுதுக் காப்பியம்
நன்னூல் இயற்ற
நினைப்பாரேல் நம்புலவர் நிலவாவோ
ஆயிரநூல் தமிழகத்தே!"

என்று கூறும் சீரிய கருத்தினை சிந்தையிற்கொண்டு உழைக்கவேண்டும் நாம். மேலும் அவர் குயிலில் எழுதி வந்த 'வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?" எனும் தொடர் கட்டுரையை நூலாக்கித்தர ஆவன செய்யவேண்டும். வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும் என வீரமுடன் முழங்கிய தளபதி இன்று நம்மை விட்டுப் பிரிந்ததை எண்ணுந்தோறும் நெஞ்சம் துணுக்குறுகின்றது. இருப்பினும் அவர் நமக்கு இட்டுச்சென்ற கட்டளைகளைத் தொடுத்து முடிப்போம் வாரீர்!!!

"கடல் போலும் எழுக! கடல் முழக்கம்போல்
கழறிடுக தமிழ் வாழ்கென்று!
கெடல் எங்கே தமிழின் நலம் அங்கெல்லாம்
தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!!"

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணகியின் தவறு ...

காலச் சக்கரம் சுழன்றது. கண்ணகி அறவோர்க்கு அளித்தலும், அந்தணர்ஓம்பலும் துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்விருந்து தருதலும் செய்து பொருளை எல்லாம் இழந்தாள் எழு நிலை மாடத்திலிருந்தவள் ஓட்டுக்கூடத்திற்கு வந்தாள். மக்கள் அவளைக் கண்டு இரக்கப்பட்டனர். மாமனார் உதவி செய்ய முன்வந்தார். ஈயென இரத்தல் இழிந்தது என்று எண்ணிய அவள் கொள்ளேன் என்று மறுத்தாள். அவளுடைய இந்த நிலையை அண்ணல் காந்தியடிகளின் சாத்வீகப் போராட்டத்திற்கு ஒப்பிடலாம். அவள் அழுத கண்ணீரும் சிந்திய மூக்கும், பசலை படர்ந்த உருவமும், மக்களை மட்டுமின்றி. கோவலனை மனத்திலும்ஒரு மாற்றத்தைக் காட்டியது. இந்த எண்ணம் பிறிட்டு எழுந்த சமயத்தில் தான் அவன், இந்திர விழாவிற்குச்சென்றான். அங்குப் போட்டிப் பாடல்கள் நடைபெற்றன. குலமாதிற்கும், வேசியர் குடியில் பிறந்தவர்களுக்கும் உள்ள வேறுபாடுகளைச் சிந்திக்கலானான். நீதி நூல்கள் கூறியவைகளை அவன் நினைவுபடுத்திக்கொண்டான். அவன் உள்ள நிறைவினில் ஒரு கள்ளம் புகுந்தது. எந்த ஊடலுக்காகக்கண்ணகியிடம் ஏங்கினானோ அந்த ஊடலே அவனுக்கு இன்று கசப்பாகிவிட்டது. அவன் பிரிந்தான்.

கண்ணகியிடம் கோவலன் நடு இரவிலே வந்து "எழுக' என்றான். எழுந்தாள் "போவோம் மதுரைக்கு" என்றான். 'ஆம்" என்றாள். மதுரை சென்றாள், வழியில் கோவலன் கோசிகன்மூலம் மாதவி தாய்மையாளவள் என்பதை அறிந்துகொண்டான்.

கண்ணகி, "எழு" என்றுசொன்னவுடன் எழுந்தது தவறு என்று கோவலன் மதுரைசென்றபின் அறிந்தான். கண்ணகியும் தான் தவறுசெய்துவிட்டாலும், அது அவனைப் பிரியாமலிருக்கச் செய்வதற்கே என்று கூறினாள். அவளுக்குத்தெரியும், அவன்காலைவரை தான்ஊரில் இருந்திருப்பானேயானால் அவனுடைய ஐயம் பொய் என்பது வெளிப்பட்டுவிடும் பின்னர் மாதவியிடமே சென்றுவிடுவான் என்று அவன் மதுரை சென்றபின் தான், தன் தெய்வீகத்தன்மையை உணர்ந்தாள் அவள் அதை மறைத்து, கோவலனுடன் இனிக்க இனிக்கப் பேசி, அவனை மகிழ்வித்தாள். ஆனால் அது கோவலனுக்கு எமனாகவே வந்தது. அவள் சிலம்பில் ஒன்றை வாங்கிச் சென்று விற்க முற்பட்டவன், வஞ்சிக்கப்பட்டதனால் திருடன் என்று கூறப்பட்டவுடன் பேச்சினன்றி நின்றான். தெய்வம் பேசிவிட்டதைக்கண்ட கோவலன் பேச்சின் திறனை இழந்தான். கோவலன் கொலையுண்டான். இப்போது தெய்வக் கண்ணகிக்கு ஒரு பெரும் பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. கோவலன் திருடன் என்ற பழி ஏற்பட்டதல்லவா? இதை எவ்வாறு பொய் என்று நிலைநாட்டுவது? எனவே கண்ணகியின் உள்ளத்தில் ஆழ்ந்து பொதிந்து கிடந்த தெய்வத் தன்மை தனது பேரொளி பெற்றுக் கிளம்பி வழக்குரைத்தல் மூலம் கோவலனது குற்றமின்மையை நிறுவிபது "அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றுவதும்" என்றதியதிப்படி கண்ணகியே அறதேவதையாகிப் பாண்டியன்முன் நின்றவுடன் அவனது ஆவி பிரிந்தது. மங்களவாழ்த்துப்பாடலில் கண்ணகியின் பெருமையை உணர்த்தக் கருதிய அடிகள் அவளை மானிடப் பெண்ணாகக் காட்டினாலும், அவளது மாண்பு தெய்வத் தன்மையுடையது என்றே புலப்படுத்தினார். அத்தெய்வத்தன்மை மதுரைப் பாண்டியன் காலத்தில் வெளிப்பட்டுச் செயல்பட்டது. பின்னர் செங்குன்றம் சென்ற கண்ணகி அங்குத்தெய்வமாக ஊர்தி ஏறிச்சென்றாள் எனக் கூறுகிறார் அடிகள்.

பின்னர் மாதவியும் கோவலன் இறந்துபட்ட செய்தி கேட்டுத் துறவு பூண்டு, தவ வழியில் தலைப்பட்டனள் அவனது கருத்துக்கேற்ப மணிமேகலையும் இளமைத் துறவு மேற்கொண்டு இடையில் ஏற்பட்ட காம இடையூறுகளை வெற்றியுடன் கடந்து சமய உண்மைகளைக்கேட்டு பவத்திறம் நீங்க நோற்றுப் பரகதி அடைந்தனள் இங்ஙனமாகக் காப்பியம் முழுவதும் பேரின்பமாம் பிறவா இன்பப் பெற்றியே திகழக்காண்கிறோம். திருவள்ளுவர் காமத்துப்பாலில் தலைவன் தலைவி உறவு கூறுமுகத்தான் சீவான்மா பரமான்மாவில் என்றும் பரநிலையை விளக்கியதற்கு ஏற்ப இளங்கோவடிகளும் கணணகிக் கதையை மையமாகக் கொண்டு, வையத்துள் வாழ்வாங்கு வாழும் முகத்தான் தெய்வமாக முடியும் என்ற பெரும் பேரின்ப நிலை விளக்கியருளினார் என்று கொள்ளுவதே சாலவும் பொருந்துவதாகும்

குறள் நெறி' வளியீட்டு விழாவில் பேராசிரியர் சி. இலக்குவனர்

தமிழ்ப் பகைவர்களின் செல்வாக்கு உயரக் காரணம் என்ன?

"குறள் நெறி" வெளியிடும் நாளாகிய இன்று பொங்கல் வரிசையில் இரண்டாவது நாளாகும். இச் சமயத்தில் என்னுடைய அன்பார்ந்த பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தை முதல் நாளை திருவள்ளுவர் நாளாகக் கொண்டாடிவரும் மரபைக் கையாண்டு வருகிறோம். இரண்டாவது நாளாகிய இன்று அவரது நினைவுநாளைக் கொண்டாடி வருகிறோம். இவ்விழாவில் 'குறள் நெறி' வெளியீட்டையும் தொடங்கி வைக்கிறோம்.

இன்றைய சூழ்நிலையில் மக்கள் அமைதிவாழ்வு பெறவும், பசி, பிணியற்று இன்புற்று வாழவும் அவர்களுக்கு வழிகாட்டுவதே இன்றியமையாத பணியாகும்.

தமிழர்கள் குறளைத் தமதாக்கிக் கொள்ளவில்லை.

திருவள்ளுவர் தமிழ்நாட்டில் பிறந்திருந்தாலும், திருக்குறளைத் தமிழில் இயற்றியிருந்தாலும் அவர் அந்நூலைச்செய்தது உலகத்திற்காகவே ஆகும் அதன் காரணமாக அது உலகப்பொதுமறை என்று அழைக்கப்படுகிறது.

வள்ளுவர் தமிழகத்தில் தோன்றி தமிழில் எழுதியிருந்தாலும் தமிழர்களாகிய நாம் இன்னும் அதனுடைய நுட்பங்களை உணர்ந்து அதன்படி வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவில்லை. தமிழர்கள் இன்னும் அதனை நல்ல முறையில் விளங்கிக் கொள்ளாததால்தான் தமிழ்ப்பற்று இல்லாதவர்களும் - தமிழ்ப் பகைவர்களும் - மக்கள் பகைவர்களும் அதனை இழித்தும் பழித்தும் கூறியும் அதனல் பெருமை பெற்றும் வருகிறார்கள். தமிழர்களாகிய நாம் அதன் நெறிகளைக் கடைப்பிடித்து வந்தால் நாடும், நாமும், நம்மைச் சேர்ந்தவர்களும் சேராதவர்களும் நன்மை அடையத் துணைபுரியும்.

மருந்தைத் தள்ளுவாரும் நஞ்சைக் கொள்ளுவாரும் உண்டா?

குறள் நெறி என்பது வள்ளுவர் நெறி குறள் என்ற சொல்லுக்கு இன்று சிலருக்கு — ஏன் உயர்ந்த சமயத் தலைவர்களுக்குக்கூட - உண்மையான பொருள் தெரியவில்லை. அவ்வாறு அறிந்துகொள்ளாமல் - குறளைக்கும் குறளுக்கும் பொருள் புரியாமல் - குறள் என்பது கோள் சொல்லக்கூடியது என்று கருதி மக்களிடத்தில் உரைத்தும் வருகிறார்கள்.

மன்பதையில்சாதிப்பாகுபாடும்,அரசியல் கட்சிகள் பாகுபாடும் வலிமை பெற்று நிற்கின்றன. பாகுபாடுகள், வேற்றுமைகள் அனைத்தும்மறைந்து எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுமானல் மக்கள் அனைவரும் குறள்நெறியைத் தம்முடைய வாழ்க்கை நெறியாகக்கொள்ளவேண்டும்.

இன்று வெளிவரும் பெரும்பாலான இதழ்களின் நிலை என்ன ? மக்களிடம் பொறிநுகர் உணர்ச்சிகளைக் கிளர்ந்தெழும்படிச் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றன. நல்லறிவு கொடுத்து மக்களைத் திருத்தி நல்வழிப்படுத்தவேண்டிய கடமை இதழ்களுக்குண்டு. அக்கடமையைப் பலவும் மறந்துவிடுகின்றன. நாட்டில் பெரும்பாலான மக்கள்வளர்ச்சியற்ற நிலையிலேயேயிருந்து வருகிறார்கள். ஆகவே அவர்களின் நிலைக்கு இறங்கிச் சென்று தங்களின் அறிவை விற்றுல்தான் பணம் சேர்க்கமுடியும் என்று கருதி அவ்விதமே செய்கிறார்கள். நான் அவர்களைச்குறை கூறவேண்டுமென்பதற்காக இவற்றைக்கூறவில்லை.

செய்தி இதழ்களில் புலவர்களுக்கும் போதிய விளம்பரம் கொடுப்பது கிடையாது. அரசியல் தலைவர்களின் பேச்சுக்கும் திரைப்பட அரசிகளின் படத்துக்கும் தான் அவை பெருமதிப்பு அளிக்கின்றன. திரைப்பட அரசிகளில் பலருக்கு எழுதப் படிக்கத் தெரியாமல் இருக்கும். ஆனுல் மக்களுடைய வினக்களுக்கு அவர்கள்தான் விடை எழுதுவார்கள். மக்களிடையே இதற்குள்ள ஆர்வம் வாழ்நாள் முழுதும் நிலைத்துநிற்காது.

இசையரங்கு



கிருட்டிணனந்த பாகவதர்

15-1-64ல் நடைபெற்ற திருவள்ளுவர்விழாவில் கிருட்டிணனந்தபாகவதர் எனும் புனைபெயர் கொண்ட மின்சாரப்பேராசிரியர் மீ சுப்பிரமணியம் தம் மருமகள் திருமதி பவானி வேங்கடராமனுடன் இனிய தமிழிசையரங்கு நிகழ்த்தி எல்லோரையும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தினர்.

திரு மீ. சுப்பிரமணியம் இங் நாட்டிலும் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற அயல்நாடுகளிலும் புகழ்பெற்ற பொறியியல்வல் லுநர். நாடகங்களிலும் திரைக்காட்சிகளிலும் நடித்துள்ளார். இசைக்கலை நிகழ்ச்சியில் இணையற்றவர். நாடகங்கள், சிறுகதைகள், இசைப்பாடல்கள் இயற்றும் திறனுடையவர். வாய்ப்பாட்டிலும் கருவி இசையிலும் வல்லுநர்.

திருமதி பவானி அவர்கள் இனியகுரலுடன் ஏழிசை தழுவப் பாடும் ஆற்றல் பெற்றுள்ளனர்; புகழ்பெற்ற இசைவாணர்களிடம்பயின்றதுடன் அமையாது இன்னும் தம் மாமனரிடம் பல்துறை இசைப் பயிற்சியும் பெற்றுவருகின்றர். விரைவில் இசையுலகில் மின்னும் நட்சத்திரம் ஆவார்.

திருமதி
பவானிவெங்கடராமன்

திருவள்ளுவர் விழாவும் 'குறள்நெறி' இதழ் வெளியீடும்

மதுரை தூயமரியன்னை பள்ளிக்கூடத் திறந்த வெளியரங்கில்

15—1—64 மாலை ஆறு மணியளவில் தொடங்கி காரைக்குடி டாக்டர் வ. சுப. மாணிக்கம் தலைமையில் திருவள்ளுவர் விழாவும், 'குறள்நெறி' வெளியீடும் சிறப்புற நடந்தேறின. டாக்டர் லலிதா காமேசுவரன் (நாவலர் சோமசுந்தர பாரதியாரின் திருமகளார்), புதுக்கோட்டை அண்ணலார் சுப்பிரமணியனார், திருக்குறளார் வி. முனிசாமி, திரு சி. டி மலோனி [அமெரிக்கர்] முதலியோர் திருவள்ளுவர் சீர்த்தியையும் திருக்குறள் சிறப்பையும் எடுத்துரைத்து 'குறள்நெறி' இதழ் வெளியீட்டை வாழ்த்தி வரவேற்றனர்.

முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் 'குறள்நெறி' இதழை வெளியிடுமுகத்தான் அமெரிக்க அறிஞர் மலோனியிடம் கொடுத்து வாழ்த்தினர்.

காவலரின் இரு கவலைகள்

'எனக்கு நீண்ட நாட்களாக இரண்டு கவலைகள் இருந்துகொண்டு வந்தன. அந்த இரண்டு என்ன? முதற் கவலை. தமிழ் அழிந்து விடுமோ, குறள் அழிந்து விடுமோ என்பது. பிறநூல்களை வளர்க்க வந்தவர்கள் தங்கள் தங்கள் நூல்களை வளர்க்கும் பணியில் ஈடுபடாமல் விட்டுவிட்டுக் குறளை ஒழிக்கும் பணியில் இறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்த பிறகுதான் அக்கவலை தோன்றியது.

எங்கெங்கோ இருக்க வேண்டிய நூல்கள் எல்லாம் எங்கெங்கோ போய் இருந்துகொண்டிருக்கின்றன. எங்கேயோ இருக்க வேண்டிய தமிழும் அதன் நூல்களும் எங்கோ ஒரு மூலையில் இருந்து கொண்டிருக்கின்றன. இச்சூழ்நிலையே என்னுடைய இரண்டாவது கவலைக்குக் காரணமாகும்.

"குறள் நெறி" தோன்றியது அறிந்தவுடன்-அதனைத் தொடங்கி வைக்கும் விழாவில் கலந்துகொண்டவுடன்-அவ்விரு கவலைகளும் மெல்ல மெல்ல என்னைவிட்டு அகன்று கொண்டு வருவதாக உணருகிறேன்'

வருகிறது! வள்ளுவரின் 2000ஆவது ஆண்டு!!
வரலாறு காணா விழா எடுப்போம்!!!

☆ ☆

இந்தியப் பெரு விழாவாகக் கொண்டாட
இனிதே அரசு முயற்சி எடுக்கட்டும்!

(முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்)

தமிழும் குறளும் ஏன் பரவவில்லை? தமிழில் புலமை மிக்கவர்களுக்கு ஆங்கில அறிவு இல்லாமலிருந்தது ஆங்கிலம் கற்றவர்க்கோ தமிழறிவு கிடையாது. நற்பேறாக அவ்விரண்டும் ஒருங்கு அமையுமானால் பொருள் வசதி இல்லை. மூன்றும் அவர்களிடம் இருந்தால் வெளிநாடு போக வாய்ப்புக் கிட்டுவதில்லை எல்லாம் இருந்து வெளிநாடு சென்றாலும் அப்பொழுது அவர்கள் தமிழின்பெருமையை அங்குச்சொல்லி வருவது கிடையாது. இத்தகைய நிலைகளே தமிழ் பரவாததற்குக் காரணங்களாகும்.

கலிங்கப் போர்

இக்காலத்தில் பத்திரிகை நடத்தி வெற்றி பெறுவது கலிங்கப்போரில் ஈடுபட்டு வெற்றி காண்பதை ஒத்ததாகும். இத்தகைய துயரை அறிந்தும் கூட திரு இலக்குவனார் தமிழின் மீதுள்ள பற்றினால் 'குறள் நெறி'யை வெளியிடும் பணியில் இறங்கியுள்ளார்கள். குறள் தோன்றிய மதுரையிலிருந்து 'குறள் நெறி'' தோன்றுவது மிகவும் பொருத்தமும் பெருமையும் உடையதாகும்.

திருவள்ளுவர் தோன்றி 1995 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் 5 ஆண்டுகளில் 2000 ஆண்டு பிறக்கவிருக்கிறது. அந்த விழாவைத் தமிழக அரசு நடத்த வேண்டுமென்பது என்னுடைய ஆசையாகும். தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும் அவ்விழா நடத்தப்பட வேண்டும். இம்முயற்சியில் இன்றிலிருந்தே நாம் ஈடுபட வேண்டும். திட்டமிட்டு இதனை நடத்த வேண்டும். இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடச் செய்யும்படி செய்ய 'குறள் நெறி'' துணை புரியவேண்டும்.

தனி நெறி... குறள் நெறி!

'குறள் நெறி' என்பது தனிநெறியாகும். அது அறிவுறுத்துவன யாவை? மறையும், சான்றோரும் இரண்டு கரங்களைப் போன்றன. இல்லறம் நல்லது, பிறர் பழிக்கத் தகாததாக இருந்தால் துறவறமும் நல்லது. பொய் சொல்லாதே! புலால் உண்ணாதே! கள் குடிக்காதே! சூதை நினைக்காதே! இவ்வாறே அந்நெறி அறிவுறுத்துகிறது. இன்னும் அது காட்டுவன என்ன?

படி! படிக்க வேண்டியதைப் படி! படிக்க முடியாவிட்டால் கேள்! கேட்டுச் சிந்தனை செய்! அதன்படி நட.

எண்ணு! நல்லதை எண்ணு அழுந்தமாக எண்ணு! ஆழமாக எண்ணு!

செய்! துணிந்து செய்! காலம் அறிந்து செய்! திறன் அறிந்து செய்!

நட்புக் கொள்! ஆராய்ந்து கொள்! தீய உறவைத் தீயென விலக்கு! நல்லோர் உறவை நயந்து கொள்!

மேற்கண்ட நெறிகளைத் தானே திருக்குறள் காட்டுகிறது. இக்கருத்துக்கள் எவ்வாறு எக்காலத்திற்கும்

(தொடர்ச்சி 2ஆம் பக்கம் பார்க்க)

3ஆம் பக்கத் தொடர்ச்சி --- —

அறிவேன் ஆனாலும் தொடங்குகிறேன்

இன்றைய நிலையில் இதழ் தொடங்கி நடத்துவது இடர்ப்பாடு உடையது என்று நான் அறிவேன், இருப்பினும் அதை துணிந்து தொடங்கியிருக்கிறேன்.

"குறள் நெறி'' என்ற பெயர் மக்களின் உள்ளங்களை கவரக்கூடியது. அப்பெயரினின்றே கட்சிச் சார்பற்ற இதழ் என்பது தெளிவாகிறது. தான் நினைக்கும் கருத்துக்களை நல்ல முறையில் மக்களிடம் பரப்ப அது துணிந்து நிற்கிறது.

மருந்தும் நஞ்சும்

மருந்து உண்ணும்போது கசக்கத்தான் செய்யும். ஆனால் சாப்பிட்ட பிறகு உடலுக்கு நலம் விளைவிப்பதாகும்; ஆனால் நஞ்சு அருந்துவதற்கு இனிமையாக இருக்கலாம். ஆனால் சாப்பிட்ட பின் உயிரையே முடித்துவிடக்கூடியது, உயர்ந்த நெறிகளை உரைக்கும் போது மக்களுக்கு கசப்பாகவே இருக்கும், ஆனாலும் அதைத் துணிந்து அதன் வழி நடந்தால் வாழ்க்கை வளமடையும். அத்தகைய மருந்தை மக்களுக்கு ஊட்ட "குறள் நெறி'' புறப்பட்டுள்ளது.

அமெரிக்கா போன்ற நாட்டில் பேராசிரியர்கள் தாங்கள் கற்றுத் தேறிய கருத்துக்களை இதழ்களாக வெளியிடுகிறார்கள். அதற்கு அரசும் செல்வந்தர்களும் பேராதரவு நல்கி வருகிறார்கள். இதனை உணர்ந்து இங்குள்ளோரும் ஆதரவு அளிக்கவேண்டும்

சில ஆண்டுகளுக்கு முன்னர் "குறள் நெறி''யை மாத இதழாக புதுக்கோட்டையிலிருந்து வெளியிட்டு வந்தேன். பின்னர் வேறிடத்திற்குச் சென்றுவிட்டதால் அது தடைப்பட்டது. இப்பொழுது திங்களிருமுறையாக அது வருகிறது

"இந்த உலகில் தோன்றியவர்கள் எல்லாம் உலகம் துன்பமயமானது என்றுதான் கூறியிருக்கிறார்கள். ஆனால் வள்ளுவர் ஒருவர்தாம் உலக வாழ்க்கை இன்பமானது என்று கூறியிருக்கிறார்'' என்று செர்மானியர் ஒருவர் சிறப்பித்துக் கூறியிருக்கிறார். அவரது நூல் இந்தியாவுக்கு வரக்கூடாது என்று மறைமுகமாகத் தடுக்கப்பட்டு இருக்கிறது. இதற்கு நமது நாட்டைச் சேர்ந்த பெரியார்கள் சிலரும் காரணமாக இருந்திருக்கிறார்கள்.

(15—1—64 இதழின் தொடர்ச்சி)

வாழ்வு நெறி

தலைமையுரை

டாக்டர் வ. சுப. மாணிக்கம்

> ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
> செல்லும் வாயெல்லாம் செயல்.

இக்குறளில் அவர் நெகிழ்ச்சியைப் பாருங்கள். ஒல்லும் வகையான் எனவும், செல்லும் வாய் எனவும் அறஞ்செய்வான் நோக்கத்திற்கு எவ்வளவு தாராளமாக விட்டுக் கொடுக்கின்றார்? தலைமேல் புல்லுக்கட்டை இறக்க உதவுவதும், ஆட்டின் கால் முள்ளை அணைத்து எடுப்பதும், முதியோர்க்கு இடங்கொடுத்து இளையோர் எழுந்து நிற்பதும், இவ்வூர்க்குச் செல்வது இவ்வண்டி என வினவினர்க்குச் சலிப்பின்றி அறிவுறுத்தலும் எல்லாமே சிறு வினையாயினும் அறவினையல்லவா? வள்ளலிடம் சென்றான் வறியனாய்த் திரும்பான்; வள்ளுவரைக் கற்றான் வாழாதிரான். வள்ளல் எப்படியும் கொடுப்பான்; வள்ளுவர் எப்படியும் வாழ்விப்பார்.

வாழ்வின் உயர்வுக்கு இன்னவளவு பொருளாதார அடிப்படை வேண்டும் எனப் பலர் மயங்கி எண்ணம் தடுமாறிச் சோர்வடைகின்றனர். உள்ள நிலையை மேலும் தள்ள நிலையாக்கிக்கொள்கின்றனர். உயர்வுக்குப் புறவடிப்படை வேண்டாம் என்பது வள்ளுவம். உயர்வாக வேண்டும் என்றால், வேண்டும் என்ற எண்ணம் வேண்டும்; அவ்வெண்ணத்தைத் திரும்பத் திரும்ப எண்ண வேண்டும்; எண்ணப்பித்து வேண்டும்; இதுவே உயர்வுக்கு வள்ளுவர் காட்டும் நெறி.

> உள்ளம் உடைமை உடைமை; பொருளுடைமை
> நில்லாது நீங்கி விடும்.

எந்தப் பொருளடிப்படை வேண்டும் என நாம் நினைக்கின்றோமோ அதனை வள்ளுவப் பேராசிரியன் உடன்படவில்லை. பொருளோ தகரக் கூடிய அடிப்படை என இகழ்வதைக் காணுங்கள். உலகில் பொருளுடையாரெல்லாம் உயர்ந்து விடவில்லையே; பொருளிலாரெல்லாம் தாழ்ந்துவிடவில்லையே பொருளாளர் தாழவும் பொருளிலார் உயரவும் காண்கின்றோம். ஆதலால் உயரவேண்டும் என்ற ஊக்கமே நல்வாழ்வுக்கு அடிப்படை என்பர் ஆசிரியர் இதனை விட உயர்வுக்கு எளியநெறி காட்டமுடியுமா? திருக்குறள் காட்டும் வழி ஏற்ற நெறிமட்டுமன்று; செய்தற்கு எளிய நெறியுமாம்

3. திருக்குறளில் பொருட்பாலே பெரும்பால் இப்பாலில் கூறப்படும் அரசியல் நெறிகள் நடைமுறைக்கு உகந்தவை. முடியரசு குடியரசு படையரசு என்ற வகைக்கு உட்பட்டு வள்ளுவர் அரசியல் வகுக்கவில்லை. நாடென்றால் அதற்கோர் நல்லரசு வேண்டும்; அது வல்லரசாகவும் இருத்தல் வேண்டும் என்பதுவே வள்ளுவ அரசியல்.

> படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
> உடையான் அரசருள் ஏறு.

இது பொருட்பாலின் முதற்குறள். அரசியல் நெறி பேசும் முதற் குறளிலேயே 'படை' என்ற சொல்லை முதலாவதாக வைத்துப்பாடுகின்றார் வள்ளுவர். படையற்றது அரசாகாது என்ற பேருண்மையை இதனைக் காட்டினும் வேறு வகையான் அறிவுறுத்த முடியுமா? தமிழறிஞர் எவ்வளவோ நூற்றாண்டுக்கு முன்னர் வலியுறுத்தியிருந்துங்கூட, சீனப்படையெடுப்புக்குப் பின்னரேதான், படையின் இன்றியமையாமையை நாம் உணர்ந்து கொண்டோம்.

அரசுவினையாளரிடம் கையூட்டை எங்ஙனம் ஒழிப்பது என்று நம் இந்தியத் தலையரசும் உறுப்பரசுகளும் இன்று மும்முரமாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. பல குழுக்களைப் புதுவதாக அமைக்க எண்ணுகின்றன இக்குழுக்களுக்குள்ளும் கையூட்டு நுழையாது என்று யார் உறுதி கூறமுடியும்? கையூட்டைக் கண்டுபிடிக்க வழி செய்தலைக் காட்டிலும் கையூட்டு நிகழாவாறு அலுவல் நெறிகளை அமைப்பதிற் கருத்துச் செலுத்த வேண்டும். இது பற்றி அரசியற் சான்றோராகிய வள்ளுவர் யாது கூறுகின்றார்?

> நாடொறும் நாடுக மன்னன்; வினைசெய்வான்
> கோடாமை கோடா துலகு.

> நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
> நாடொறும் நாடு கெடும்.

மக்களின் வேண்டுகோள்கள் தூங்காதபடியும், திட்டங்கள் காலங் கடவாதபடியும் உடனுக்குடன் செய்யப்படுகின்றனவா என்று மேலவர்கள் தம்கீழவர்களை நாள்தோறும் கவனிக்க வேண்டும் என இடித்துக் காட்டுகின்றார் ஆசிரியர். தாமதமின்றிக் காரியம் நடக்குமென்றால், கொடுக்க யாருக்குத்தான் கை நீளும்? இன்னும் ஒன்று; வள்ளுவப் பெருமான் சொன்னபடி செய்தால் சிலவகைக் கையூட்டுக்கள் ஒழிந்துபோம் என்று நம்பலாம்.

> காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
> மீக்கூறும் மன்னன் நிலம்.

இன்று பெரிய வினைஞர்களைப் பார்க்கவேண்டும் என்றால், பணியாளன் தயவு வேண்டும், எழுத்துமூலம் சில எழுதினாலும் அவை மேலவர் பார்வைக்கு எட்டுமென்று சொல்ல முடியுமா? கட்டில் எடுத்து வைத்தாற்றானே கண்ணுக்குப்படும்? ஆதலின் அமைச்சர்களும் அமைச்சரனையவர்களும் நாள்தோறும் அரைமணி நேரமோ வாரத்தில் ஒரு பொழுதோ தம் அலுவலகத்திற்கு வெளியே வந்து தடையின்றி யாரையும் பார்க்க இசைவது, குறைகேட்பது முறை காண்பது என்று வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும் அங்ஙனம் செய்யும் அன்பும் எளிமையும் இருக்குமாயின் ''மக்கட்கு இறையென்று வைக்கப்படும்' என்ற வள்ளுவர் பாராட்டு அவர்கட்குக் கிடைக்கும். மக்கள் வாக்கும் மனமாரக் கிடைக்கும். வள்ளுவ நல்லரசுக்கு வேண்டும் நடைமுறையெல்லாம் அறிந்த அரசியல் மேதை ஆதலின் இந்திய அரசியல் வாழ்வில் செல்வார் அனைவர்க்கும் திருக்குறளறிவு இன்றியமையாதது என்பது வெளிப்படை.

4. உலக நலம் என்பது சமுதாய நலம். சமுதாய நலம் என்பது இல்லற நலம். இல்லற நலம் என்பது கணவன் மனைவியின் காதல் நலம். காதல் சிறவாவிட்டால் ஞாலத்தில் எத்துறையிலும் எப்பண்பும் சிறவாது. எம் முயற்சியும் விழலுக்கு இறைத்த நீராகிவிடும். உலகிடை வேறு வகையால் வரும் இன்பத்தினும் காதலர் தம் இன்பம் சிறந்தது ஐயமில்லை; ஆனால் வேறு வகையால் வரும் துன்பத்திலும் காதலர்களுக்குள் வரும் துன்பம் கொலையனையதன்றோ? காதலர்தம் வேற்றுமை அறத்தைக் கெடுக்கவும் அரசியலைக் கெடுக்கவும் காண்கின்றோம். 'ஒருவர் பொறை இருவர் நட்பு' என்பது குடும்பத்தின் தலையாய பண்பு. உயிரொன்று என இலக்கியம் பாராட்டும் காதலர்களுக்குள்ளும் நீண்ட வாழ்நாளில் நெஞ்சு பொறுக்கமாட்டாச் சில பிணக்குகள் நிகழவே செய்யும். மனப் பூசல்கள் வஞ்சகத்தாலன்றி வாய் வார்த்தையால் வளரவே செய்யும்; சில சமயம் தடிக்கவும் செய்யும். அப்போது காதலின் நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்துகொள்ளல் என்பது பொறுத்துக் கொள்ளுதலாகும். பொறுத்துக்கொள்ளாதார் புரியாதவரே. பிணக்கைப் புரிந்துகொண்டார், இன்பப்பெருமை எய்துவர்.

> உப்பமைந் தற்றால் புலவி; அதுசிறிது
> மிக்கற்றால் நீள விடல்

பிணக்கம் அளவாகுக; மிகுதியாக்க வேண்டாம் என்று இல்லறப் பெருமகனாராகிய வள்ளுவர் காதலர்களுக்கு நுண்ணிய நாகரிக முறையில் புலப்படுத்துவர். அறம் பொருள் இன்பம் என்ற முத்திற வாழ்வுக்கும் எத்திறத்தானும் வழிகாட்டுவது திருக்குறள்

பேராசிரியர் சி. இலக்குவனார் தமிழை வாழ்விக்கும் சிறந்த இலக்கு உடையவர். என்றும் நம்பிக்கைக்கு உரிய அன்புத் தமிழர். உலகப் பெருமொழிகளுள் ஒன்றாகிய நந்தமிழைக் காத்து வளர்க்கும் நோக்கத்தால், 'குறள் நெறி' என்னும் நல்லிதழைத் தொடங்குகின்றார். அளவு கடந்த விற்பனைப் புகழ் நச்சி இன்று செய்தித்தாள்கள் கீழான செய்திச் சில்லறைகளை மேலாக வெளியிடுகின்றன. தெருச் சண்டையினும் கீழான வசைமாரி பெய்கின்றன. நல்ல எளிய புரியும் தமிழ்ச் சொற்கள் இருக்கவும், வேண்டுமென்றே கருத்தில்லாமலோ கலப்பு மொழியைப்பரப்புகின்றன. இன்ன குறைபாடுகள் இன்றி 'குறள் நெறி' இயங்குமாக. இலக்குவனாரின் 'குறள் நெறி'யால் வள்ளுவரின் குறள் நெறி எங்கும் பரவுவதாக.

உரைவேந்தர்

பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளையவர்களின் அறுபதாம் ஆண்டுநிறைவுவிழா மதுரைத் திருவள்ளுவர் கழகம் தைத் திங்கள் மூன்றும் நாள் (16-1-64) சிறப்பாகக் கொண்டாடியது. ஆட்சிமொழிக் காவலர் கி. இராமலிங்கனுர் தலைமையில் தமிழவேள் பொ. தி. இராசர் பொன்னுடை போர்த்தவும், கலையன்னை இராதா தியாகராசர் உரைவேந்தர் எனும் பட்டம் பொறிந்த பதக்கத்தை அளிக்கவும், திருவாளர் மணவாளர் பேராசிரியரின் உரைநலம் பற்றிஉரைக்கவும், பலர்பாராட்டு வாழ்த்துக்கள் பகரவும் விழாச் சிறப்புற்றது. ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு, நற்றிணை ஆகிய சங்கநூல்களுக்கு உரையெழுதியுள்ள பேராசிரியர்க்கு 'உரைவேந்தர்' எனும்உயரிய பட்டம் சாலப் பொருத்தமாகும்.

இப் பெரும் புலவர்க்கு, சித்தாந்த சைவச்செம்மல், செஞ்சொல் வீரர், சைவசித்தாந்த கலாநிதி என்னும் பட்டங்களும் இதற்கு முன்பு பலரால் அளிக்கப் பட்டுள்ளன.

தென்னுர்க்காட்டு மாவட்டத்தில், மயிலத்துக்கு அண்மையில் ஔவையார் குப்பத்தில் தோன்றிய ஔவை சு. துரைசாமிப்பிள்ளையவர்கள் மாவட்ட நிலவருவாய்த் துறை எழுத்தராய், வடவார்க்காட்டு மாவட்டத்துப் பள்ளிகளில் தமிழாசிரியராய், வடவேங்கடக் கீழ்த்திசைக் கல்லூரி விரிவுரையாளராய், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்து ஆராய்ச்சியாளராய்ப்பணிபுரிந்து, கலைத்தந்தை திரு. கருமுத்து தியாகராசச் செட்டியாரவர்களின் நல் விருப்பத்தால் இன்று மதுரைத்தியாகராசர் கல்லூரித்தமிழ்ப்பேராசிரியராக உள்ளனர்.

விழாக்கள் பலவற்றில் தலைமை தாங்கியும், விரிவுரை நிகழ்த்தியும், கட்டுரைகள்எழுதியும், ஞானமிர்தம், சைவ இலக்கியம், சிவஞான போதச்சிற்றுரையாகிய நூல்களை ஆராய்ச்சிக்குறிப்புடன் பதிப்பித்தும், சிலப்பதிகாரம், மணிமேகலை சிவகசிந்தாமணி ஆகிய பெருங் காப்பியங்கட்கு ஆராய்ச்சி நூல்கள் எழுதியும், திருக்குறளைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதியும், ஆசிரியப்பணிபுரிந்தும் பண்டைத் தமிழ்ப்பண்புகளை வளர்த்து நாடு மொழியினங்கட்குத் தொண்டு செய்த பெருமை ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்களுக்கு உண்டு. 'தமிழகப்புலவர் குழு'வில் தாமும் ஒருவராக இருந்து தம்மாலியன்ற பணியும் புரிகின்றனர்.

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கப் பணியாற்றும் இவ்வுரைவேந்தர், இன்னும் பலநூல்களுக்கு உரைவிளக்கம் தந்து பாரில் நல்லிசையும் பல்வளனும் கொண்டு எல்லா நலன்களுடனும் பல்லாண்டு பல்லாண்டு பல கோடியாண்டு வாழ்வாராக,

15-1-64 இதழின் தொடர்ச்சி.

மறைமலையடிகளின் நாட்குறிப்புக்களும் விளக்கங்களும்.

வித்துவான். மறை. திருநாவுக்கரசு (தமிழ்ப்பேராசிரியர், வ. உ. சி. கல்லூரி) தூத்துக்குடி.

1-1-1899– எனது தமிழாசிரியர் நாராயணசாமிப் பிள்ளையைத் திருவாரூர்சென்றுகண்டேன்.

விளக்கம் : இவர் நாகபட்டினத்தில் புத்தகக்கடை வணிகம் நடத்திவந்தவர்; கள்ளர் குலத்தோன்றலார்; வெ. நாராயணசாமிப்பிள்ளை. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளையின் மாணவராவர். இவர் சிறந்த இயற்றமிழாசிரியர். அடிகள் தமது இளமைப்பருவத்தே இவரையடுத்து இவர்பால் செந்தமிழ் இலக்கண இலக்கியங்களைச் செவ்வையாகக் கற்றுத்தேர்ந்தார். ('மறைமலையடிகள் வரலாறு'' பக்கம் 4)

13-1-1899–மாண்புமிகுந்த இராமானுசர் கி. பி. 986ல் பிறந்தார்.

விளக்கம்; இவர், வைணவ சமய ஆசிரியராவர். 'பாஷ்யகாரர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர். வைணவ சித்தாந்தத்தைத் தம் பேருரைகளாலான நூல்களாலும், சொற்பொழிவுகளாலும் பாரத நாடெங்கும் பரப்பியவர். வடமொழியிற் பலவும், தமிழிற் சிலவும் ஆக நூல்களையியற்றியவர்.

20-1-1899– 1) சூரியநாராயண சாத்திரியாரிடம்நீண்டநேரம் பேசினேன்.

2) தண்டலம் முதலியாரிடம் ''கற்றுக்கொள்வன வாயுள நாவுள''.

3) (அப்பர் தேவாரப் பாட்டொன்றின் முதலடி) என்பதற்குப் பஞ்சாட்சரத்தை வாயினாலும், நாவினாலும் கூறுகின்றேம்'' என்றேன். முதலியாரின் வினா 'வாயுள' என்றாற்போதுமே! 'நாவுள' என்று கூறவேண்டியதேன்'' என்பதாம்.

விளக்கம்: 1) இவர்தாம் வி. கோ. சூரியநாராயண சாத்திரியார், என்னும் மாபெரும் புலவர். இவர் கிறித்துவக் கல்லூரியின் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் ஆவர். அடிகள் தனித் தமிழியக்கம் காண்பதற்கு முன்பே தமது வட மொழிப் பெயரைத் தனித் தமிழிற் பரிதிமாற் கலைஞன்' என்று மாற்றிக்கொண்டவர். தம் கல்லூரியிற் பணிபுரியத் தேவைப்பட்ட தமிழாசிரியரைத் தேர்ந்து கொள்ள நடைபெற்ற புலமையாளர் தேர்வில் அடிகளைத் தேர்ந்து கொண்டவர். அப்பணியை அடிகளை பெறச்செய்தவர். அடிகள் பால் அளவில்லா நட்புக்கொண்டவர். புலமைத் தமிழில் உயர்ந்த நடையில் நாடக நூல்கள் சில யாத்தவர். வேறு நூல்கள் சிலவும் எழுதியவர். பேரழகர். முப்பத்து மூன்றும் அகவையில் மண்ணுலக வாழ்வை நீத்தவர்.

தமிழுணர்ச்சியில் வீறுகொண்ட இவர் தம் அருமை பெருமைகளையும். அடிகளுக்கும் இவர்க்கும் நிகழ்ந்த நட்பின் இனிமைகளையும் எனது நூலில் (''மறைமலையடிகள் வரலாறு'' பக்கம் 20, 21, 22, 23) காணலாம்.

விளக்கம்; 2) தண்டலம்முதலியார் என்றது தண்டலம் பாலசுந்தரம் முதலியாரை ஆம். அடிகள் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியர் பணி ஏற்றுத் தம் குடும்பத்தாருடன் சென்னையிற் குடியேறினர். அடிகளார்க்குச்சென்னை வாழ்க்கை இனிது இயங்கியதற்குப்பேருதவி புரிந்தவர் இம்முதலியாரேயாவர். இவர் அரசாங்க மொழிபெயர்ப்பாளராய்ப் பணிபுரிந்தவர். சிறந்த குடியில் தோன்றியவர். புலமையறிந்து போற்றும் புலமையர். அடிகளைத் தன் மகனெனக் கொண்டு அவரையும் அவர் குடும்பத்தையும் தம்மில்லத்தே வைத்துச் சிலகாலம் பாதுகாத்தவர் ''கண்ணை இமை காப்பதுபோல அடிகள் குடும்பத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்துவந்தார். அடிகள் தம் குடும்ப நகைகளை முதலியாரிடம் அடைக்கலமாக வைத்திருந்தார். முதலியாரின் குடும்பத்தாரும் அவரைப் போலவே அடிகள் குடும்பத்தாருக்குப் பேரன்புடன் உதவிகள் செய்த

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

(15—1—64 இதழின் தொடர்ச்சி)

வள்ளுவரும் அரசியலும்

(டாக்டர் பா. நடராசன், எம்.ஏ., டி.லிட்., எம்.எல்.ஏ.)

ஏனெனில் குடியாட்சி அமையலாம்; ஆனால் அந்தக் குடியாட்சியில் முறைமை செய்யப்படாது முற்போக்கான பொருளாதாரக் கொள்கைகள் நிலை நாட்டப்படாது இருந்தால், நாட்டிலே பொருள் வளம் மிகுதலில்லாது போய்விடும்; அப்போது குறிக்கோளாகிய இன்பம் எய்துவது எவ்வாறு?

நேர்மாறாக முடியாட்சி இருக்கலாம்; ஆனால் அவ்வாட்சியில் நாட்டில் நல்லமைதி நிலவி மக்கள் பொருள் வளம் சிறக்குமானால் அதனால் இழிவென்ன?—என்று கேட்பது போலிருக்கிறது வள்ளுவர் அரசியல் கோட்பாடு.

குடியரசுக் கொள்கை தலைசிறந்து நிற்கும் இது காலையில் நல்லாட்சியானாலும் தன்னாட்சிக்கு நிகரில்லை. (A good government is no substitude for Self-government) என்ற கோட்பாடு நிலைபெற்றுள்ளது. தன்னாட்சி என்பது மக்களில் ஒவ்வொருவருக்கும் இயல்பிலே வரும் பிறப்புரிமை என்றும், எனவே ஒவ்வொருவரும் வாக்குரிமை பெற்றுத் தாமாகவே அமைத்துக் கொள்ளும் ஆட்சியே உயர்ந்ததென்றும், அதனால் வரும் இன்பமே மன எழுச்சியை அளிப்பதென்றும், குடியரசுக் கொள்கையில் நம்பிக்கையுடையோர் கருதுகின்றனர்.

இவ்வாறாக இயல்பாயமைந்ததென்றும் பிறப்பாலே உரியதென்றும் கொள்ளப்படும் தனி மனித அரசியல் உரிமை பற்றி வள்ளுவர் ஏதும் கருதவே இல்லை. வள்ளுவர்க்கு அரசியல் என்பது ஒரு உரிமைப் பிரச்சினையாக எழவில்லை. அது ஒரு சூழ்நிலைப் பிரச்சினைதான். அது இலட்சியக் கருத்தன்று; காரணம். அதுவும் துணைக் காரணக் கருவியேதான். இன்பம் பெறுதற்குத்—துணையான பொருள் பெறுதற்கு இரண்டாம் துணையான கருவியே அரசியல். காரணத்தை அவர் காரியமாகக் கொண்டாரில்லை கருவி நன்றாக அமைய வேண்டும் என்பதே அவர் கவலை.

இன்பம் என்பது உள்ளத்தால் உரிமையை உள்ளுவதால் மட்டும் வருவதன்று; சூழ்ந்துள்ள நிலைமையாலும் வருவதே. ஏன்? சூழ்ந்துள்ள நிலைமைகளே பொருள் செயல் வகையில் சிறப்பானவை.

மனித உரிமை

வள்ளுவர் தனிமனித ஆட்சி உரிமையைமறுத்தார் என்பது இதனால் பெறப்படாது பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற சமத்துவ நெறியை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னே முழங்கிய பெரியார் மனிதனுக்கு ஆட்சி உரிமையை மட்டும் மறுத்தார் என்று எண்ணுவதற்கில்லை. ஆனால் அவ்வகையான உரிமையை வழங்கிவிட்டதால் மட்டும் வாழ்வில் இன்பம் எய்துவதற்கு ஏதுவான சூழ்நிலை தானே வந்து விடுமா என்பதைக் கருதியிருக்கலாம். லார்டு மெக்காலே கூறியதுண்டு "எந்த ஆட்சி, மக்கள் இன்பமாக வாழவேண்டுமென்று விழைகிறதோ, எந்த ஆட்சி மக்கள் அவ்வாறு இன்ப வாழ்வு வாழும் நெறியை அறிந்துள்ளதோ, அதுவே மேலான ஆட்சி" என்று அது குடியாட்சியாக இருக்கலாம்; முடியாட்சியாக இருக்கலாம்; பலர் ஆட்சியாக இருக்கலாம்; சிலர் ஆட்சியாகவும் இருக்கலாம்.

கிரேக்க அறிஞர்கள்

வரலாற்றுக் கண்ணோடு நோக்கினால் குடியாட்சியே இன்பம் பயக்கும் ஆட்சியென்று சொல்லிவிட முடியாது வள்ளுவர்க்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த கிரேக்க அறிஞர்களான பிளேட்டோவும், அவர் சீடரான அரித்தாடிலும் நல்லாட்சி எது என்பது பற்றி நன்காய்ந்து வெவ்வேறு முடிவுகளுக்கு வந்தனரேனும் இருவருள் ஒருவராவது குடியாட்சிக்கு முற்றும் பரிந்துரை செய்தாரிலர்.

பிளேட்டோ பலகாலும் சிந்தனைசெய்து ஓரிலட்சிய சமுதாயம் எவ்வாறிருக்க வேண்டுமென்பதைக் குடியரசு (Republic) என்ற தமது நூலில் தீட்ட முயன்றார். கற்போருக்கு இவர் வரைந்தது ஒரு கற்பனை சமுதாயம் என்றே படும். அதாவது அதிலே கவிஞர் காணும் வகையில் எல்லோரும் எல்லாப்பொருளும்—மாடு மக்கள் பெண்டிர், உண்டி, உள்ளிட்ட எல்லாப் பொருளும் பொதுவுடைமையாக்கி அவர்களை ஆள்வதற்கு அரசஞானி ஒருவனையும் தலைவனாகக் கற்பித்துச் சென்றார். இத்தகைய சமூகம் மனித இயல்புக்கு முரண்பாடானது. அதற்குரிய அரசஞானியாம் தலைவன் வந்து வாய்ப்பதும் அரிதினும் அரிது. பிளேட்டோவின் அரசியல் தத்துவம் வெறும் பகற்கனவே என்று அறிஞர் எல்லோரும் கைவிட்டுச் சென்றனர்.

அவர் வழி வந்த சீடர் அரித்தாடில்; ஆனாலும் அவர் தமது குருவின் கோட்பாட்டை நகைத்து மறுக்க அஞ்சினாரில்லை. கிரேக்க மக்கள் வாழ்ந்த சின்னஞ்சிறு நாடுகளின் பல நூற்றாண்டு அரசியல் வரலாற்றையெல்லாம் ஆராய்ந்து விட்டு முடியாட்சி, தக்கோர் சிலர் ஆட்சி, குடியாட்சி ஆகிய மூன்றும் மாறி மாறி வரும் இயல்பினை உடையதாக உலகில் காணப்படுகின்றதென்றும், முடியாட்சி செங்கோன் முறை கோட, கொடுங்கோலன் அல்லது சர்வாதிகாரியின் ஆட்சி முளைக்கிறதென்றும், அதைக் கண்டு தாங்காது சிலகாலம் சென்றதும், தக்கார் ஒரு சிலர் கூடித் தங்கள் ஆட்சியை நிறுவுகின்றனர் என்றும் அவருள்ளும் ஒழுக்கஞ் சிதையத் தீயோர் சிலர் ஆட்சி விளைகின்றதென்றும், அதன் பின்னர் மக்கள் திரண்டு குடியாட்சியை நிறுவுகின்றனரென்றும், அதுவும் சிலகாலம் செல்ல இழுக்குற்றுப் பலராட்சி தோன்றுகின்றதென்றும், அந்தப் பலராட்சியும் பொறுக்க முடியாததாக மீண்டும் முடியாட்சி தோன்றுகின்றதென்றும்—இவ்வாறாக நல்லாட்சி மூவகையும், அவற்றில் சிதைவுகளான தீயாட்சி மூவகையும் ஆக அறுவகை ஆட்சிகளும், ஒன்றன் பின் ஒன்றாக மாறி மாறிச் சுழன்று வந்துகொண்டிருப்பதே வரலாறு தெரிவிக்கும் அரசியல் நியதி என்றும் முடிவு கட்டினார். முடிவு கட்டிவிட்டு இறுதியில் முடியாட்சியும் நன்றன்று—முற்றுந் துறந்த முனிவரே கோனாயினும். அதுபோன்றே பிறப்பொக்கும் எல்லா மகற்கும் என்பதனாலேயே மற்றெல்லாமும் ஒக்கும் என்று கருதும் குடியாட்சியும் முறையன்று என்கின்றார்.

ஏனைய அரசியல் அறிஞர்கள்:

அரித்தாடிலுக்கு மிகப் பின்னே வந்த அரசியல் தத்துவ அறிஞருள் ஆப்சு என்பார் கோனாட்சியையும் இலாக் என்பார் கோனைத் தலைமையாகக் கொண்ட குடியாட்சியையும். உரூசோ என்பார் முற்ற நிறைவு பெற்ற குடியாட்சியையும், மாக்கியவலி என்பார் வரம்பற்ற அதிகாரம் கொண்ட கோனாட்சியையும், காரல்மார்க்சு என்பார் தொழிலாளர் சர்வாதிகார ஆட்சியையும் வெவ்வேறாக ஆதரித்துப் போயினர்.

வள்ளுவர் அரசியல்:

வள்ளுவர் இந்த அரசியல் தத்துவ விசாரணைகளில் எல்லாம் தலையிடவே இல்லை. அவரை அனுபவவாதி என்று சொல்லலாம். அவர் அனுபவத்தில் கண்டதும், இன்று நாம் காண்பதுவும் என்ன வென்றால், எந்த ஆட்சி வந்தாலும் இறுதியில் அதிகாரம் ஒரு தலைவனிடம் வெகுவாகக் குவிந்து காணப்படுகிறது. அவனை மன்னன் எனலாம், சர்வாதிகாரி எனலாம், பிரசிடென்ட் எனலாம், பிரதமர் எனலாம். ஆனால் ஒருவன் எவ்வாறாயினும் தலைவனாக அமைந்து விடுகிறான். அமைந்து விட்ட பிறகு அவன் எத்தகைய குண நலன்கள் படைத்தவனாக இருக்க வேண்டும்? நல்லாட்சி நடத்துவதற்கு என்னென்ன தகுதிகள் வாய்ந்தவனாக இருக்க வேண்டும் என்பனபற்றித்தான் ஆராய்வது முக்கியம் என்று கொள்ளலானார்.

(தொடரும்)